வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

வார மலர்

Email : news@eelanadu.lk

மலர் : 05

15.09.2024 ஞாயிற்றுக்கிழமை

இதழ் : 259

பக்கங்கள் : 16

மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும்
இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல.390, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேன் யூனியன் பணப்பரிவர்த்தனை



சகலருக்கும் வெற்றி ஐக்கியமான நாடு

# வெறுப்பை தோற்கடித்து எழுவோம்

அச்சம், வெறுப்பு மற்றும் கோவம் என்பவற்றின் ஊடாக தேசத்தை கட்டியெழுப்பும் கட்டுக்கதைகள் உங்கள் முன்னால் விதைக்கப்பட்டு வருகிறது. உண்மை என்னவெனில் இருண்ட யுகத்திலிருந்து வெளிப்பட்ட எதுவும் பிரகாசிக்காது என்பதேயாகும். இலங்கையை கட்டியெழுப்பும் ஒரே வழி ஐக்கியமாக திகழ்வது மாத்திரமே. ஒரே குறிக்கோளை நோக்கி பயணிப்போம். அனைவருக்கும் ஒரே வெற்றியை பெற்றுக்கொடுப்பதனூடாக வலிமையான இலங்கையை கட்டியெழுப்புவோம்.

சிலரின் வெற்றி, அநேகரின் தோல்வி. அனைவருக்கும் வெற்றி என்பதே முழு தேசத்தினதும் வெற்றியாகும்.

எம் தேசத்தை வெற்றி பெற செய்வோம்!

සජිත් ප්‍රේමදාස
சஜித் பிரேமதாச
Sajith Premadasa

X

www.sajith.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

# தமிழரின் ஒற்றுமையை சிதைக்கும் முட்டாள்களுக்கு பாடம் புகட்டுவோம்

## விக்னேஸ்வரன் எம். பி. அறைகூவல்

யாழ்ப்பாணம், செப். 15


தமிழர்களின் ஒற்றுமையை சிதைக்கும் வகையில் செயல்பட்டுவரும் படித்த முட்டாள்களுக்கும் தமிழ்ப் பொது வேட்பாளரை இழிவாகப் பேசி, சிங்கள வேட்பாளர்களுடன் கூட்டு என்று கூறி அவரையும் நிராகரிக்கக் கோரும் பகிஷ்கரிப்பாளர்களுக்கும் தகுந்த பாடம் புகட்டும் வகையில் வரும் செப்ரெம்பர் 21 ஆம் திகதி காலையிலேயே சென்று சங்கு சின்னத்துக்கு தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டும்- இவ்வாறு பாராளுமன்ற உறுப்பினர், நீதியரசர் சி. வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

பருத்தித்துறை - சுப்பர் மடம் பொது மண்டபத்தில் வெள்ளிக்கிழமை மாலை நடைபெற்ற "நமக்காக நாம்" பரப்புரை கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

எமது வடக்கு - கிழக்கு மாகாணங்கள் பறிபோய்க் கொண்டிருக்கின்றன. இது உங்களில் எத்தனை பேருக்குத் தெரியும்? எனக்குக் கிடைத்த ஆய்வு விவரங்களின் படி திருகோணமலை மாவட்டத்தில் நடைபெறும் காணி ஆக்கிரமிப்பு காரணமாக தற்போது அம் மாவட்ட சனத்தொகையில் 27 சதவிகிதமானோர் சிங்கள மக்கள் என்றும் அம் மாவட்டத்தின் மொத்த நில விஸ்தீரணத்தில் 36 சதவிகிதத்தை அம் மக்கள் தம் கைவசம் வைத்துள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

அவர்களின் ஆய்வாளர்கள் இங்கு வந்து நிலைமையை அறிந்தே தமது ஆய்வறிக்கையைத் தந்துள்ளார்கள். இதைவிட மிகவும் ஆபத்தான ஒரு விடயம் வெளியிடப்பட்டுள்ளது. வடமாகாணத்தையும் கிழக்கு மாகாணத்தையும் இணைக்கும் திருகோணமலையின் குச்சவெளிப் பிரதேசம் கடந்த பத்து ஆண்டுகளில் மிக மோசமான மாற்றங்களைச் சந்தித்துள்ளது.



அப்பிரதேசத்தின் 50 சதவீத நிலங்கள், அதாவது 41,164 ஏக்கர் காணிகள், பல அபிவிருத்தித் திட்டங்களுக்காகவும் பௌத்த கோயில்களைக் கட்டுவதற்காகவும் அரசாங்க திணைக்களங்களால் கையேற்கப்பட்டுள்ளதாகவும் அங்கிருந்த மக்கள் விரட்டப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. மேலும் 3887 ஏக்கர் கையேற்கப்பட்ட காணிகளில் 26 பௌத்த விகாரைகள் கட்டப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

அத்துடன் இவ்வாறான மிகவும் செழிப்பான காணிகளிலும் கரையோரப் பிரதேசங்களிலும் இருந்து வந்த தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் தமது வாழ்வாதாரங்களை இழந்துள்ளார்கள் என்றும் கூறப்பட்டுள்ளது. விரட்டப்பட்ட மக்கள் தமது காணிகளுக்குப் போக முடியாதபடி இராணுவம் அங்கு நிலை கொண்டிருக்கின்றது என்றும் கூறப்பட்டுள்ளது.

எமது இளைஞர்கள், படித்தவர்களும் பாமரர்களும், நாளாந்தம் வெளிநாடுகளுக்கு செல்ல ஆயத்தமாகி வருகின்றார்கள். எமது சனத்தொகை இதனால் குறையப் போகின்றது. ஆகவே சிங்கள வேட்பாளர் ஒருவருக்கு எம் மக்கள் வாக்களிப்பது இவ்வாறான தமிழர் எதிர்ப்பு செயல்களை முடக்கி விடப்போகின்றது என்பதில் சந்தேகமில்லை.

இதனால்த்தான் எமது தமிழ் வேட்பாளருக்கு உங்கள் மேன்மையான வாக்குகளை அளியுங்கள் என்று கேட்கின்றோம். அவரால் இவ்வாறான காணி ஆக்கிரமிப்புகளை நிறுத்த முடியுமா என்று கேட்பீர்கள். முடியும் என்பது எனது பதில்.

எமது மக்கள் ஒன்றிணைந்து தமது தனித்துவத்தைக் காட்டும் வண்ணம் தமிழ் பொது வேட்பாளருக்கு வாக்களித்தால், ஆறு இலட்சத்துக்கு மேல் எமது மக்களின் வாக்குகள் பதியப்பட்டால், நாம் உலக அரங்கிலே எமது தனித்துவத்தையும் எமக்கு நேர்ந்த கதியையும் தற்போது எமக்கெதிராக நடக்கும் நடவடிக்கைகளையும் கோடிட்டு சொல்ல முடியும்.

எமது பொது வேட்பாளரும் அவருடன் சேர்ந்தவர்களும் உலக நாடுகளிலே மற்றும் ஐக்கிய நாடுகளிலே தற்போதைய அவலங்கள் பற்றியும், தொடர்ந்து வந்த சிங்கள அரசாங்கங்கள் எமக்கு செய்து வரும் அநியாயங்கள் பற்றியும் கூற முடியும்.

அரியநேத்திரனுக்கு எமது மக்கள் வெகுவாக வாக்களித்தால் அந்த வாக்குகளுக்கு ஒரு மதிப்புண்டு மாண்புண்டு! அதை வைத்து அவரை தமிழ் மக்களின் ஒரு அடையாளமாகக் காட்டி எமக்கு நடந்து வரும் அநியாயங்கள் பற்றி நாடுகளுக்குக் கூறி இலங்கை அரசாங்கம் எமக்கு தொடர்ந்தும் இன்னல்களை விளைவிப்பதைத் தடுக்கலாம் - என்றார்.

(எ)

# தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர் விபத்தில் சிக்கி உயிரிழந்தார்!

யாழ்ப்பாணம், செப். 15

யாழ்ப்பாணம் - ஊர்காவற்றுறை பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்தில் தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்தார்.

தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய, புங்குடுதீவு பகுதியைச் சேர்ந்த கண்ணதாசன் எனும் பொலிஸ் உத்தியோகத்தரே இவ்வாறு உயிரிழந்தார்.

வேலணையில் இருந்து அராலி சந்தியை நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த வேளை மற்றுமொரு மோட்டார் சைக்கிளுடன் மோதி, எதிரே வந்த ஜே. சி. பி. வாகனத்தினுள் அகப்பட்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இந்த விபத்து தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# இரண்டு வாரங்களுக்குள் ஓ.எல். பரீட்சை பெறுபேறு



கொழும்பு, செப். 15

இரண்டு வாரங்களுக்குள் சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் வெளியிடப்படவுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுக் காலை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில், "எதிர்வரும் 2025 ஆம் ஆண்டு முதல் பரீட்சைகள் கால அட்டவணைகள் மற்றும் பரீட்சை அட்டவணைகள் என்பனவற்றை தாமதமின்றி நடைமுறைப்படுத்த முடியும்.

எதிர்வரும் வருடத்துக்கான பாடசாலை முதலாம் தவணை ஜனவரி 20ஆம் திகதி ஆரம்பமாகிறது. ஆனால், மூன்றாவது தவணை கல்வி நடவடிக்கைகளுக்காக இரண்டு வாரங்கள் பாடசாலைகளை நடத்த வேண்டியுள்ளது.

அதன்படி, 2025 ஜனவரி 20 ஆம் திகதி முதலாவது பாடசாலை தவணையின் முதல் நாள் ஆரம்பமாகிறது. அதற்குள் சீருடைகள், பாடப்புத்தகங்கள் எல்லாம் தயாராக இருப்பதை உறுதி செய்து கொள்ளலாம்.

அனைத்து பரீட்சைகளும் பிற்போடப்பட்டிருந்தன. இந்த ஆண்டுக்கான புலமைப்பரிசில் பரீட்சை நாளை (இன்று) நடைபெறுகிறது.

மேலும், சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் இன்னும் இரண்டு வாரங்களில் வெளியாகும்.

மாதக்கணக்கில், வருடங்களில் பிற்போடப்பட்ட உயர்தரப் பரீட்சையை இந்த வருடத்திலேயே நவம்பர் 25ஆம் திகதி நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

2025 ஆம் ஆண்டின் பரீட்சைகள், கால அட்டவணைகள் மற்றும் பரீட்சை அட்டவணைகள் ஆகியவை தாமதமின்றி ஒன்றாகச் செயல்படுத்தப்படும்" - என்றார். (எ)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு வார மலர்
Eelanadu

Email : news@eelanadu.lk
மலர் : 05
15.09.2024 ஞாயிற்றுக்கிழமை
இதழ் : 259
பக்கங்கள் : 16


மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
MoneyGram. மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.



பிரசித்திபெற்ற தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய வருடாந்த தேர்திருவிழா நேற்று காலை பக்திபூர்வமாக நடைபெற்றபோது...

# சுமந்திரன், கஜேந்திரன் எம்.பிக்கள் அடுத்த தேர்தலில் அகற்றப்படுவர்!

## அரியத்தை எதிர்ப்போர் தோற்கடிக்கப்படுவர் எச்சரிக்கை விடுத்தார் விக்னேஸ்வரன் எம்.பி.

யாழ்ப்பாணம், செப். 15

**அடுத்த தேர்தலில், தமிழ்த் தேசிய அரங்கிலிருந்து பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன் மற்றும் செ.கஜேந்திரன் ஆகியோர் அகற்றப்படுவார்கள் என தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் சீ.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**



தமிழ்ப் பொதுவேட்பாளரை தோற்கடிப்போம் என கூறிய எம்.ஏ.சுமந்திரனும், தேர்தலைப் புறக்கணிக்கக் கோரும் செல்வராசா கஜேந்திரனும், தமிழ்த் தேசிய அரசியல் பரப்பிலிருந்து அகற்றப் படுவார்கள் என அவர் குறிப்பிட் டார்.

நெல்லியடியில் நேற்று வர்த்தக சங்கத்தினர் மத்தியில் உரையாற் றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- வாக்களிப்பதற்கு இன்னும் 6 நாட்களே உண்டு. அனை வரும் தவறாமல் சங்கு 15

## சங்குக்கு வாக்களித்து தமிழர்களாக எம் ஒற்றுமையை உலகிற்கு உணர்த்துவோம்

### நெல்லியடி வாணிபர் கழகம் அழைப்பு

வடமராட்சி, செப். 15

தமிழ்ப் பொதுவேட்பா ளர் பா.அரியநேத்திரனுக்கு ஆதரவாக சங்கு சின்னத் துக்கு வாக்களித்து தமிழர்க ளாக எமது ஒற்றுமையை உலகிற்கு உணர்த்துவோம் என நெல்லியடி வாணிபர் கழகம் அழைப்பு விடுத் துள்ளது.

தமிழ்ப் பொது 15



## அரசியல் தீர்வுடன் வடமாகாணத்துக்கு பொருளாதார அபிவிருத்தியும் தேவை!

### யாழில் கூறினார் ஜனாதிபதி ரணில்

யாழ்ப்பாணம், செப். 15

வடக்கில் அரசியல் பிரச்னைக்கான தீர்வு மாத்திரமல்லாது பொருளாதார அபிவிருத்திக்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட வேண்டும் என ஜனாதிபதி வேட்பாளர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள் ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம் பெற்ற தேர்தல் பிரசார கூட்டத் தின் போதே அவர் இதனை 15



## தமிழ் மக்களின் தெரிவு ஈழத்தமிழரின் அரசியல் வேணவாவை வலுப்படுத்தும்!

### வடக்கு - கிழக்கு நீதிக்கும் சமாதானத்துக்குமான குருக்கள் துறவியர் ஒன்றியம் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், செப். 15

ஜனாதிபதித் தேர்தலில், தமிழ் மக்க ளின் தெரிவு, ஈழத்தமிழரின் அரசியல் வேணவாவை வலுப்படுத்தும் என நம்பு வதாக, வட கிழக்கு மாகாணங்களுக்கான நீதிக்கும் சமாதானத்துக்குமான குருக்கள் துறவியர் ஒன்றியம் குறிப்பிட்டுள்ளது.

தெற்கிலிருந்து ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் சிங்கள, பௌத்த தேசியத்தின் மேலாண் மையை வலியுறுத்தியே பிரசார மேடைகளை அலங்கரிக்கிறார்கள் 15

## புலமைப்பரிசில் பரீட்சை இன்று!

கொழும்பு, செப். 15

தரம் 5 புலமைப்பரி சில் பரீட்சை நாடளாவிய ரீதியில் இன்று நடை பெறவுள்ளது.

நாடளாவிய ரீதியில், தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை இன்று நடை பெறவுள்ள நிலையில், பரீட்சைக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இம்முறை 3 இலட் சத்து 23 ஆயிரத்து 879 பரீட்சார்த்திகள் தோற்ற வுள்ளனர்.

தமிழ் பிரிவில் 79 ஆயிரம் பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு தோற்றவுள் ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாய கம் குறிப்பிட் டார். 15

## தீர்வு தரக்கூடியவர் ரணிலே!

### யாழ்ப்பாணத்தில் அமைச்சர் டக்ளஸ்

யாழ்ப்பாணம், செப். 15

தமிழ் மக்களின் அரசியல் பிரச்னைகளுக்கான தீர்வை வழங்கக் கூடியவர் ரணில் விக்கிரமசிங்கவே என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டம் நேற்று இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்தார்.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் ஏற்பாட்டில் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்ரமசிங்கவின் 15

## தியாகி திலீபன் நினைவுக்கு தடை கோரும் யாழ்.பொலிஸ்

யாழ்ப்பாணம், செப். 15

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வுகளுக்கு தடை கோரி யாழ்ப்பாண பொலிஸாரினால் யாழ். நீதவான் நீதிமன்றில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தியாக தீபம் திலீபனின் 37ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் இன்று முதல் 26ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன. 15

## கஜேந்திரன் எம்.பி உட்பட மூவருக்கு அழைப்பாணை!

கிளிநொச்சி, செப். 15

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் உட்பட மூவ ருக்கு கிளிநொச்சி நீதி வான் நீதிமன்றம் 15

## புலிகளின் எழுச்சிப் பாடல்களோடு நுவான் போபகே தேர்தல் பிரசாரம்!

மட்டக்களப்பு, செப். 15

தமிழீழ விடுதலைப் புலிகளின் எழுச்சிப் பாடல் களோடு, மக்கள் போராட்ட முன்னணியின், தேர்தல் பரப்புரைக் கூட்டம் மட்டக்களப்பு கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில், மக்கள் போராட்ட முன்னணி சார்பில், நுவான் போபகே போட்டியிடுகிறார்.

இவரை ஆதரித்து, போராட்ட முன்னணியின் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகள், அரச அலுவலகங்களை பிரசாரத்துக்கு பயன்படுத்தும் கட்சிகள்

## பொதுச் சொத்துக்கள் துஷ்பிரயோகம் குறித்து இதுவரை 758 முறைப்பாடுகள்

கொழும்பு, செப். 15

**பாடசாலைகள், அரச அலுவலகங்களை அரசியல் கட்சிகள் தங்கள் பிரசாரத்துக்கு பயன்படுத்தி வருகின்றன. இவ்வாறு, பொதுச் சொத்துக்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுவது தொடர்பில் அதிகளவில் முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக ட்ரான்பரன்சி இன்டநஷனல் சிறீலங்கா தெரிவித்துள்ளது.**

செப்ரெம்பர் 11ஆம் திகதி வரை இதுதொடர்பில் 758 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

பொதுக் கட்டடங்களை தேர்தல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்துவது குறித்து அதிகளவில் அதாவது 343 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. பொது மைதானங்கள், அரச அலுவலகங்கள், பாடசாலைகள் போன்றவற்றை தேர்தல் பிரசாரங்களுக்காக பயன்படுத்துகின்றனர் எனவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

இவ்வாறான பொதுக் கட்டடங்களை பயன்படுத்திய பின்னர் அதற்கான கட்டணங்களைச் செலுத்தாமை அல்லது ஒரு குறிப்பிட்ட வேட்பாளருக்காக மாத்திரம் அவ்வாறான இடங்களை ஒதுக்குதல் குறித்த முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. மேலும் அந்த கட்டடங்களில் தேர்தல் விதிமுறைகளுக்கு மாறாக சுவரொட்டிகள் போன்றவற்றை காட்சிப்படுத்துதல் குறித்த முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன என்று ட்ரான்ஸ்பரன்சி இன்டநஷனல் தெரிவித்துள்ளது.

அரசாங்க ஊழியர்களை அவர்களின் திறமைகளை அவர்களின் பணி நேரங்களை தேர்தல் பிரசார நோக்கங்களுக்காகப் பயன்படுத்துதல் குறித்த முறைப்பாடுகளும் கிடைத்துள்ளதாக ட்ரான்ஸ்பரன்சி இன்டநஷனல் தெரிவித்துள்ளது.

சிரேஷ்ட அதிகாரிகள் உட்பட அரசாங்க ஊழியர்கள் அரசியல் கட்சிகளுக்கும் வேட்பாளர்களுக்கும் ஆதரவாக பிரசாரங்களில் ஈடுபடுகின்றனர் என்பதற்கான ஆதாரங்களுடன் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. சமூக ஊடகங்களிலும் இவ்வாறான நடவடிக்கைகள் காணப்படுகின்றன. இவை தேர்தல் சட்டங்களை மீறும் செயல்கள் என அந்த அமைப்பு மேலும் தெரிவித்துள்ளது. (எ)

# பரீட்சை நிலையங்களுக்கு அருகில் பிரசார நடவடிக்கையில் ஈடுபடாதீர்

## ஜனாதிபதி வேட்பாளர்களிடம் கோரிக்கை

கொழும்பு, செப். 15

2024 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை இன்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறுகிறது.

இதனால், தேர்தல் பிரசாரங்கள் பரீட்சைகளுக்கு இடையூறு ஏற்படுத்தலாம். எனவே, இன்றைய தினம் காலை பரீட்சை நிலையங்களுக்கு அருகில் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுவதை தவிர்த்துக் கொள்ளுமாறு பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர, ஜனாதிபதி வேட்பாளர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இன்றைய தினம் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை 2,849 நிலையங்களில் நடைபெறவுள்ளன. இந்த ஆண்டு 3 இலட்சத்து 20,879 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர். (எ)

# ஒரு கிலோ 860 கிராம் தங்கத்தூள் பறிமுதல்

## விமான நிலையத்தில் ஒருவர் கைது

கொழும்பு, செப். 15

சட்டவிரோதமான முறையில் இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட ஒரு கிலோவுக்கும் அதிகமான தங்கத்தூளுடன் நபர் ஒருவரை விமான நிலைய சுங்க அதிகாரிகள் கைது செய்தனர்.

டுபாயில் இருந்து இந்தியா ஊடாக வந்த இந்த நபரிடம் ஒரு கிலோ 860 கிராம் தங்கத்தூளை சுங்க அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

இவ்வாறு, கைது செய்யப்பட்ட நபர் நீர்கொழும்பைச் சேர்ந்த 37 வயதுடையவர் எனத் தெரியவந்துள்ளது. (எ)

# நாம் யாரையும் தாக்கவில்லை தேசிய மக்கள் சக்தி மறுப்பு



கொழும்பு, செப். 15

கொழும்பில் நடைபெற்ற மாநாட்டின் மீது தமது கட்சியின் உறுப்பினர்கள் தாக்குதல் நடத்தியதாக தேசப்பற்றுள்ள தேசிய முன்னணி முன்வைத்த குற்றச்சாட்டை நிராகரிப்பதாக தேசிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

இந்தத் தாக்குதலுக்கும் தமது கட்சியைச் சேர்ந்த எவருக்கும் தொடர்பில்லை என அந்தக் கட்சியின் செயல்குழு உறுப்பினர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

தேசப்பற்றுள்ள தேசிய முன்னணியால் தேசிய நூலக ஆவணச் சேவை சபை கேட்போர் கூடத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மாநாடு ஒன்றின் போது மோதல் நிலையொன்று ஏற்பட்டிருந்தது.

பின்னர் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், மக்கள் விடுதலை முன்னணியின் வனாத்தமுல்ல அமைப்பாளர் மற்றும் கிருலப்பனை பிரதேச அமைப்பாளர் உள்ளிட்ட குழுவினரே இந்தத் தாக்குதலை நடத்தியதாக அந்த அமைப்பின் மத்திய செயல்குழு உறுப்பினர் நுவன் பெல்லந்துடாவ குற்றஞ்சாட்டினார். இந்த நிலையிலேயே தேசிய மக்கள் சக்தி அதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளது. (எ)

# ரூ. 1350 பெற்றுக்கொடுத்ததே எங்களுக்கு பெரிய வெற்றி

## அமைச்சர் ஜீவன் சொல்கிறார்

அக்கரப்பத்தனை, செப். 15

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு 1700 ரூபாய் பெற்றுக் கொடுக்காமல் 1350 ரூபாய் பெற்றுக்கொடுத்துள்ளீர்கள் என பலர் விமர்சனம் செய்கின்றனர்.

1700 ரூபாய் பெற்றுத்தருகிறேன் என்று சொல்லியிருந்தேன். இருந்தபோதிலும் 1350 ரூபாய் பெற்றுக்கொடுத்துள்ளோம். இதுவே எங்களுக்கு பெரிய வெற்றியாகும் என நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவித்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் ஏற்பாட்டில் அக்கரப்பத்தனை மன்ராசி விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் மாலை தேர்தல் பிரசாரக் கூட்டம் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

வரலாற்றில் முதல் தடவையாக அக்கரப்பத்தனை பகுதிக்கு 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளோம். அதேபோன்று, இதுவரையும் மலையகத்தை நாங்கள் எந்த இடத்திலும் தலை குனிய வைத்ததில்லை அதுதான் எமது இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்.

அதேபோன்று, ஒரு சிலர் விமர்சனம் செய்கிறார்கள் அவர்களே 2018 ஆம் ஆண்டு 50 ரூபாய் வாங்கித் தருகிறேன் என்று கூறினர். இதுவரைக்கும் பெற்றுக் கொடுத்தார்களா இல்லை.

அதேபோல் சஜித் பிரேமதாஸவும் சிறு தோட்ட உரிமையாளர் ஆக்குகிறேன் என்று சொல்கின்றார். நடைமுறைப்படுத்துவதை சொல்ல வேண்டும். அதை விடுத்து பொய்களை கூறிக்கொண்டு மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கின்றார்கள். 50 ரூபாய் பெற்றுக் கொடுக்க முடியாதவர்கள் இன்று எம்மை விமர்சனம் செய்கின்றார்கள்.

இம்முறை நுவரெலியா மாவட்டத்தில் 2 இலட்சத்துக்கும் அதிகமான வாக்குகளை பெற்று நாங்கள் வெற்றி பெறுவோம். அந்த வெற்றியில் மலையக மக்களாகிய நீங்களும் பங்கு கொள்ள வேண்டும் என்பதே எனது ஆசை. அதேபோல் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சியில் நிறைய கறுப்பு ஆடுகள் இருக்கின்றன.

அவற்றையும் 22 ஆம் திகதிக்குப் பிறகு காலை உடைத்து விரட்டி அடிப்போம். ஏனென்றால் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் என சொல்லிக்கொண்டு இந்தப் பக்கம் ஒரு கால் அந்த பக்கம் ஒரு கால் என வைத்துக்கொண்டு இருக்கின்றார்கள்.

நான்கு வருட காலமாக நான் பாராளுமன்றத்தில் இருக்கின்றேன். இதில் 88 தடவைகள் மலையக மக்கள் சார்ந்து பேசியிருக்கின்றேன்.

அதை விடுத்து நான் பாராளுமன்றத்துக்கு சென்று மலையக மக்களை சார்ந்து அல்லாமல் வெறுமனே வெற்று கதைகளை பேசிக் கொள்வதில்லை.

உங்களுக்குத் தெரியும் இரண்டு வருடங்களுக்கு முன்னர் இருந்த விலைக்கும் தற்போது இருக்கும் விலைக்கும் எவ்வளவு வித்தியாசம் என்று. ஆனால், விலைவாசி அதிகரித்திருந்தாலும் 2 வருடத்துக்கு முன் நாட்டில் பொருட்களே இல்லாத ஒரு சூழ்நிலை இருந்தது. ஆனால், தற்பொழுது விலை அதிகரித்தாலும் நாம் வாழ்வதற்குத் தேவையான அனைத்தும் இப்பொழுது இருக்கின்றது - என்றார். (எ)

# சாரதியின் கட்டுப்பாட்டையிழந்து ஆற்றுக்குள் வீழ்ந்து வான் விபத்து

## தந்தை பலி, தாய் மற்றும் மகன் காயம்

களுத்துறை, செப். 15

களுத்துறை - ஹொரணை வீதியில் படவத்தை பிரதேசத்தில் இடம்பெற்ற வான் விபத்தில் தந்தை உயிரிழந்ததுடன் தாய் மற்றும் மகன் காயமடைந்ததாக களுத்துறை வடக்கு பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்றது.

பொக்குனுவிட்ட, வெலிக்கடை பிரதேசத்தைச் சேர்ந்த 69 வயதுடைய தந்தையே உயிரிழந்தார்.

திருமண நிகழ்வுக்குச் செல்வதற்காக களுத்துறையிலிருந்து ஹொரணை நோக்கிப் பயணித்த வான் ஒன்று சாரதியின் கட்டுப்பாட்டையிழந்து வீதியை விட்டு விலகி அருகிலிருந்த ஆற்றில் கவிழ்ந்து வீழ்ந்ததில் இந்த விபத்து இடம்பெற்றது.

விபத்தின் போது, வானில் பயணித்த தந்தை, தாய் மற்றும் மகன் காயமடைந்த நிலையில் கல்பாத மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் தந்தை உயிரிழந்தார்.

இந்த நிலையில், தாயும் மகனும் மேலதிக சிகிச்சைக்காக ஹொரணை மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர்.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை களுத்துறை வடக்கு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# 10 வாள்களுடன் இருவர் கைது!

களுத்துறை, செப். 14

களுத்துறை தெற்கு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கித்துலாவ பிரதேசத்தில் 10 வாள்களுடன் இருவர் பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

களுத்துறை பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பிலேயே இந்த நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

26 மற்றும் 30 வயதுடைய இவர்களே வாள்களுடன் கைதாகினர்.

இந்த வாள்கள் அனைத்தும் குற்றச்செயல்களுக்குப் பயன்படுத்துவதற்காக வைக்கப்பட்டிருந்துள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து, கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மேலதிக விசாரணைகளுக்காக களுத்துறை தெற்கு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
15.09.2024 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், ஆவணி 30

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# ரணிலின் தோல்வி?

அரசியலுக்கும் அறிவுஜீவித்தனத்திற்கும் இடையில் அதிக இடைவெளியுண்டு. புத்திசாலித்தனமான நபர் என்றால் அது ரணில்தான் என்பது அனைவருக்குமே தெரிந்த விடயம். சாதாரண சிங்கள மக்கள் மத்தியில் கூட ரணிலின் தந்திரம் பிரபலமானது. அவர் ஒரு “கேம் காரய” என்று கூறுவார்கள். இவ்வாறானதொரு பின்புலத்தில் தென்னிலங்கையின் போட்டி கடுமையாக இருக்கின்றது. அநுரகுமார திஸநாயக்க வெற்றிபெற்றுவிடுவாரோ என்னும் கணிப்பு மேலோங்கியிருக்கின்றது.

இந்த நிலையில் தமிழ் மக்களின் வாக்குகளே வெற்றியை தீர்மானிக்கும் வாக்குகளாக மாறக் கூடிய வாய்ப்பு அதிகமுண்டு. 2015இல் அப்படித்தான் நடந்தது. சில லட்சம் வாக்குகளால்தான், மைத்திரிபால சிறிசேன வெற்றிபெற்றார். ஆனால், இப்போது நிலைமை அதிகம் சிக்கலானதாக இருக்கின்றது. 2015இல் தற்போது காணப்படுவது போன்றதொரு தீவிரமான மும்முனை போட்டி இடம்பெறவில்லை. சிங்கள மக்களின் வாக்குகளை அதிகம் பிளவுபடுத்தக் கூடிய நிலைமையும் காணப்படவில்லை. அறகலய கிளர்ச்சியின் மூலம் அதிக செல்வாக்கை பெற்றுக்கொண்ட ஜே.வி.பி, தற்போது தவிர்க்க முடியாத சக்தியாக எழுச்சியுற்றிருக்கின்றது.

இவ்வாறானதொரு பின்புலத்தில் ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றிக்கான வாய்ப்பு ஊசலாடுவது போன்றே தெரிகின்றது. நெருக்கடிமிக்க காலத்தில் ரணில் நாட்டை காப்பாற்றியவர் என்னும் பார்வையுண்டு - அது உண்மைதான் என்று சிங்கள மக்கள் ஏற்றுக்கொண்டால், ரணிலே முன்னிலையில் இருந்திருக்க வேண்டும். ஆனால் அவ்வாறான சூழலை காண முடியவில்லை.

ஒரு வேளை ரணில் தோல்வியுற்றால் நாட்டில் மீண்டும் நிலைமைகள் மோசமடையுமா? இந்தக் கேள்வியின் அடிப்படையில் சிந்தித்தால், நிச்சயமாக சிங்கள மக்கள் ரணிலையே அதிகாரத்திற்கு கொண்டுவர வேண்டும். ஒரு வேளை அது நடக்காவிட்டால், சிங்கள மக்கள் வேறு ஏதோ ஒன்றையே விரும்புகின்றனர் என்னும் முடிவுக்கே வர வேண்டும்.

ரணிலின் தோல்வி மீண்டும் நாட்டை நெருக்கடிக்குள் தள்ளுமாக இருந்தால் ரணிலே வெற்றிபெறுவார் - ஒரு வேளை அவ்வாறு நடக்காது விட்டால், ரணிலின் அதிகார அரசியல் வாழ்வு இத்துடன் முடிந்துவிடும்.

# நாங்கள் பின்வாங்கி இருக்காவிட்டால் பங்களாதேஷின் நிலை இலங்கைக்கும்!

## கூறுகிறார் மகிந்த ராஜபக்ஷ



கொழும்பு, செப். 15

அறகலயவின்போது நாம் ஒரு அடி பின்வாங்கி இருக்காவிட்டால் இலங்கை இன்று பங்களாதேஷ்போல் மாறி இருக்கும் - என்று பொதுஜன பெரமுன கட்சியின் தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷவை ஆதரித்து நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நல்லாட்சியின்போது அரசுடன் இணைந்து செயற்பட்டவர்களும் இன்று ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுகின்றனர். (தேசிய மக்கள் சக்தி) அவர்களைப் பற்றி தெரிந்தவர்கள் நிச்சயம் வாக்களிக்கமாட்டார்கள். கள்வர்களை பிடிப்போம் எனக் கூறியே நல்லாட்சியின்போது வந்தனர். தற்போதும் அதே கோஷத்துடன் வந்துள்ளனர்.

நாட்டில் அறகலய ஏற்பட்டது. மக்களின் பிரச்னையைவிட சூழ்ச்சிக்காரர்கள் முந்திக்கொண்டனர். அன்று நாம் ஓர் அடி பின்வாங்கி இருக்காவிட்டில் இந்நாடு பங்களாதேஷ் போல் ஆகி இருக்கக்கூடும்.

போருக்கு கட்டளையிட்ட நானோ அல்லது கோட்டாபய ராஜபக்ஷவோ மக்கள் மீது ஒரு தோட்டாவைக்கூட பயன்படுத்துவதற்கு இடமளிக்கவில்லை - என்றார். (அ)

# வாக்காளர் அட்டைகள் விநியோகம் நேற்றுடன் நிறைவு செய்யப்பட்டது

கொழும்பு, செப். 15

ஜனாதிபதித் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை வீடுகளுக்கு சென்று விநியோகிக்கும் பணிகள் நேற்றுடன் நிறைவு செய்யப்பட்டதாக தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வாக்காளர் அட்டை கிடைக்காதவர்கள் தங்களது பகுதிகளுக்கு உட்பட்ட தபால் அலுவலகத்துக்குச் சென்று ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தி வாக்காளர் அட்டையைப் பெற முடியும் என பிரதி தபால்மா அதிபர் ராஜித ரணசிங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்காக தபால் மூலம் வாக்களிப்பதற்குத் தகுதி பெற்றுள்ளவர்களில் 98 சதவீதமானோர் வாக்களித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# வவுனியாவில் வீடு கையளிப்பு

வவுனியா, செப். 15

தமிழ் நிலம் மக்கள் அமைப்பின் ஊடாக, வவுனியா இராசேந்திரன்குள கிராமத்தில், நோய்வாய்ப்பட்ட பெண்ணுக்கு அமைக்கப்பட்ட வீடு நேற்று கையளிக்கப்பட்டது.

சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்ட நிலையில் பெண்ணுக்கு, 8 இலட்சம் ரூபா செலவில், நடுத்தர வீடு, குடிதண்ணீர் வசதி மற்றும் மலசலகூடம் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

தமிழ் நிலம் மக்கள் அமைப்பின் தலைவர் வி. விநோகரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், வவுனியா பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் சி.சன்முகானந்தன் மற்றும் பொது மக்கள் என பங்கேற்றனர்.

இந்த திட்டத்திற்கு, அவுஸ்திரேலியா பொறியியலாளர் குழுமத்தினால், நிதி உதவி வழங்கி வைக்கப்பட்டது. (அ)

# கிளிநொச்சியில் விவசாயிகள் கௌரவிப்பு

கிளிநொச்சி, செப். 15

கிளிநொச்சி கண்டாவளை பிரதேசத்தில், கடந்த 2023 ஆம் ஆண்டில், காலநிலைக்கு சீரமைவான விவசாய நடவடிக்கையில் சிறப்பாக செயற்பட்ட விவசாயிகள் கௌரவிக்கப்பட்டனர்.

வேல்ட் விசன் நிறுவனம் மற்றும் இந்திரா குழுமம் என்பன இணைந்து, காலநிலைக்கு சீரமைவான விவசாய நடவடிக்கையை மேம்படுத்தும் நோக்குடன் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

2023 ஆம் ஆண்டு, கண்டாவளை பிரதேசத்தில், குறித்த செயற்றிட்டத்தில் சிறப்பாக செயற்பட்ட விவசாயிகள், பணப்பரிசில், சான்றிதழ் மற்றும் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில், பிரதேச விவசாய போதனாசிரியர், கிராம சேவையாளர், வேல்ட் விசன் நிறுவன உத்தியோகத்தர்கள், இந்திரா குழும அலுவலர்கள், பிரதேச விவசாயிகள் என பலர் பங்கேற்றனர். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதுமையை மகிழ்ச்சியாக எதிர்கொள்வோம்!



**முனைவர் இரா. கற்பகம்**

அறுபது வயது கடந்தவர்களை மூத்த தலைமுறையினர் என்று கூறுகிறோம். ஓய்வு பெறும் வயதும் அறுபது என்றே பொதுவாகக் கருதப்படுகிறது. அறுபதைக்கடந்தவுடன் எல்லாவற்றையும் துறந்துவிட்டு, வீட்டுக்குள் அடைந்துகொண்டு, புத்தகத்திலும் தொலைக்காட்சியிலும் மூழ்கி முடங்கிப் போகவேண்டும் என்பது கிடையாது. அப்படி யாரும் இப்போது இருப்பதும் இல்லை. சுறுசுறுப்பாக ஓடிக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

அறுபதுகளைத் தாண்டி எழுபதை அடையும்போதுதான் முதுமை நம்மை இறுகப் பற்றுகிறது. எழுபதையும் தாண்டி எண்பதுகளில் நுழையும்போது பிறர் உதவியில்லாமல் வாழ முடியாது என்ற நிலை ஏற்படுகிறது. அந்நிலையில் அவர்களில் பெரும்பாலோர் அனுபவிப்பது - தள்ளாமை, தனிமை, இயலாமை! இது ஒரு பெரும் சமூகப் பிரச்னையாக மாறியுள்ள நிலையில் இதற்கான காரணங்களை ஆராய்ந்து தீர்வுகளைத் தேட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

முதியவர்களின் கோணத்திலிருந்து பார்ப்போம். குடும்பத்துக்காக உழைத்து ஓய்ந்து நிற்கும் நேரம் அவர்கள் யாரைச் சார்ந்து இருப்பார்கள்? பிள்ளைகளைத்தான்! வெளியில் சென்று தங்கள் வேலைகளைப் பார்த்துக்கொள்ள இயலாது. வீட்டிற்குள்ளேயும் அவர்களது நடமாட்டம் குறைந்து போகும் உணவுக்கும் பிறவற்றுக்கும் பிள்ளைகளைத்தான் நம்பியிருக்க வேண்டும். கையில் பணமிருந்தாலும், முன்புபோல வீட்டை நிர்வாகம் செய்யும் திறன் வெகுவாகக் குறைந்திருக்கும். அல்லது இயலாத குடும்பச் சூழலாக இருக்கும்.

பிள்ளைகள் வெளியூரிலோ வெளிநாட்டிலோ இருப்பார்களேயானால் அவர்கள் பாடு திண்டாட்டம் தான். உடம்புக்கு ஏதேனும் வந்துவிட்டால் மிகவும் சிரமம். 'இளம் வயதில் ஓடியாடி, ஒரே நேரத்தில் பத்து வேலைகளைச் செய்தோமே, இப்போது ஒவ்வொன்றுக்கும் இன்னொருவர் உதவிக்காகக் காத்து நிற்கிறோமே' என்ற ஆதங்கமும், 'நாம் போற்றி வளர்த்த பிள்ளைகள் நமக்குப் போதிய நேரம் ஒதுக்கவில்லையே' என்ற வருத்தமும் அவர்களுக்கு வாழ்க்கையில் சலிப்பை உண்டாக்கு கின்றன.

கணவன், மனைவி இருவரும் இருக்கும் வரையில் ஏதோ பழைய நினைவுகளைப் பற்றிப் பேசிக்கொண்டு பொழுதை ஓட்டிவிடு வார்கள். ஒருவர் போய் மற்றொரு வர் இருந்தால் தனிமைதான்! படுத்தபடுக்கையில் இருந்துவிட்டாலோ, 'எப்போதடா வாழ்க்கை முடியும்' என்று ஏங்கத் தொடங்கிவிடுவார்கள். அவர்கள் எதிர்பார்ப்பது - பிள்ளைகள், பேரக் குழந்தைகள் ஆகியோரிடமிருந்து ஒரு புன்னகை, அவ்வளவே!

முதியவர்களுக்கு, 'தான், தன் சுகம்' மட்டுமே கவனத்தில் உள்ளது. தங்கள் பிள்ளைகளின் பிரச்னைகள் அவர்கள் கண்களுக்குத் தெரிவதில்லை. பெரும்பாலான குடும்பங்களில் தாத்தாவும் பாட்டியும் எண்பதுகளில் இருப்பார்கள். அம்மாவும் அப்பாவும் அறுபதை நெருங்கிக் கொண்டிருப்பார்கள். பிள்ளைகளுக்கே சார்க் கரை நோய், உயர் ரத்த அழுத்தம் எல்லாம் வந்திருக்கும். அம்மா அநேகமாக மாதவிடாய் நிற்கும் தருணத்தில் இருந்து உடலாலும் மனதாலும் சோர்ந்து போயிருப்பார். பேரப்பிள்ளைகள் கல்லூரியில் படிப்பவர்களாக இருப்பார்கள்.

வயதானவர்களுக்கோ தூக்கம் வராது. ஒன்று, நேரம் கழித்துத் தூங்குவார்கள். அல்லது, அதிகாலை வெகு சீக்கிரத்தில் எழுந்து கொள்வார்கள். மின்விளக்கைப் பளீரென்று எரியவிட்டுத் தொலைக்காசியில் நிகழ்ச்சிகளைப் பார்க்க ஆரம்பிப்பார்கள். வயதிகாகிவிட்டால் கேட்கும் திறன் குறைந்து விடுமல்லவா? தொலைக்காட்சி பெட்டி பேரோசையோடுதான் ஓடும்! பிற குடும்ப நபர்கள் எல்லோருக்கும் இது ஏற்குமா?

ஒரு குடும்பத்திலுள்ள பலரும் ஓய்வு பெறும் முன்னரே, திட்டமிட்டு, ஒரே அடுக்ககத்தில் தனித்தனி வீடுகள் வாங்கிக்கொண்டு, ஒருவருக்கொருவர் துணையாக, ஒருவர் சுதந்திரத்தில் அடுத்தவர் அதிகம் தலையிடாத வண்ணம் மகிழ்ச்சியாக இருக்கலாம். நண்பர்களாகச் சேர்ந்து ஒரே ஓய்வு இல்ல வளாகத்தில் வீடுகளை வாங்கிக்கொண்டு, தனிமையை விரட்டிவிட்டு, பிடித்த பொழுதுபோக்குகளுடன் அமைதியாக வாழலாம்.

பிள்ளைகள் இருக்குமிடத்துக்கு அருகிலேயே குடிபெயர்ந்து அவர்களுக்கு உதவியாக, அவர்களது பாதுகாப்பில் நிம்மதியாக வாழலாம். ஒரே வீட்டில், கீழ் தளத்தில் பெற்றோரும் மேல்தளத்தில் பிள்ளைகளுமாக ஒருவருக்கொருவர் அனுசரித்து வாழலாம். அறுபதுக்கு முன்னரே சொந்த ஊரில் வீடு கட்டித் தயாராக வைத்துக் கொண்டு, ஓய்வுபெற்றடன் அங்கு சென்றுவிடலாம். ஆனால் அதற்கு முன்னரே அடிக்கடி சென்று வந்து பழக வேண்டும். இல்லையெனில் அந்நியப் பட்டுப் போகக் கூடும்.

அவ்வப்போது எல்லோருமாக உறவினர்கள் வீட்டு விசேஷங்களுக்கும் அருகிலுள்ள சுற்றுலாத் தலங்களுக்கும் சென்று வரலாம். மூன்று தலைமுறையினரும் ஒன்று சேர்ந்து திட்டமிட்டு வாழ்ந்தால் முதுமையை மகிழ்ச்சியாக எதிர்கொள்ளலாம்!

## இந்தவார ராசிபலன் 15.09.2024 - 22.09.2024

ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம் - ஆவணி 30
நல்ல நேரம்: 09.03 - 10.33 ராகு காலம் : 4.33 - 06.03 திதி : துவாதசி

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

இந்த வாரம் எதிர்பாராத தனவரவு வர ஏற்றம் காண்பீர்கள். அரசு வகையில் எதிர்பார்த்த ஆதாயம் மற்றும் உதவிகளால் தொழிலில் முன்னேற்றம் ஏற்படலாம். உங்கள் திறமை மிக்க செயல்களால் வெற்றிகளும், பாராட்டுதல்களும் குவியும். உங்கள் வாழ்க்கையில் மனைவி மூலமாக முன்னேற்றத்துக்கான நல்ல ஆலோசனைகள் கிடைக்கும். அரசு பணிபுரியும் பெண்கள் தங்களுக்கு விருப்பமான இடத்திற்கு இடமாற்றம் பெற முயற்சிப்பர்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இந்த வாரம் எதிர்பார்த்த இனங்களில் இருந்து தன வருமானம் தாராளமாக இருக்கும். குடும்ப உறவுகளின் ஒத்துழைப்பால் வீட்டில் அமைதி நிலவும். பெற்றோரின் உடல் நிலையில் அக்கறை எடுத்தல் அவசியம். பிறமொழி பேசும் பெண்களின் நட்பினால் வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படும். கணவன், மனைவி இடையே அன்பும் பாசமும் பெருகும். குழந்தைகள் படிப்பு வகையில் செலவுகள் அதிகரிக்கும். எதிர்கால தொழில் முன்னேற்றத்தை கருத்தில் கொண்டு விரிவாக்கத் திட்டங்களில் முதலீடுகள் செய்வது முன்னேற்றத்தைத் தரும்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் உங்கள் செயல்திறன் கூடும். பலவழிகளிலும் வெற்றி மேல் வெற்றி வரும். செல்வ நிலையும் உயரும். பணிபுரியும் பெண்களுக்குத் திருமண காலம் கூடிவரும். அனைத்து வசதிகளுடன் கூடிய அழகிய தனி வீடு அமையும். வெளிநாடு செல்லும் வாய்ப்புகள் வரும். பிற்கால நலன்கருதி சேமிப்புக்கள், பங்குச் சந்தை ஆகியவற்றில் முதலீடு செய்வது நல்லது. பணிபுரியும் பெண்களுக்கு உயர் அதிகாரிகள் ஆதரவால் பணியில் முன்னேற்றங்கள் ஏற்படும். சிலருக்குப் புதிய வாகன யோகம் ஏற்படும்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் காரியங்கள் அனைத்தும் சிறப்புற, வெற்றிகரமாக நடக்கும். புதிய நண்பர்கள் சேர்க்கை, தொழில் இலாபம் ஆகியவை ஏற்படும். கற்பனை வளம் பெருகும். தாய் மூலம் நன்மைகள் ஏற்படும். நீங்கள் எப்போதும் பணம் விஷயமான சிந்தனையுடன் இருப்பார்கள். சினத்தை குறைத்து உடன் பிறப்புகளுடன் ஒத்துச் செல்வது நல்லது. இடைவிடாத வேலை காரணமாக நேரத்துக்கு உணவருந்த முடியாத நிலை ஏற்படும். பணவரவு தராளமாக இருக்கும்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

பதவி உயர்வுகள் தேடி வரும். குடும்பத்தில் உள்ளவர்களின் அனுசரணையால், குழப்பங்கள் நீங்கி குதூகலம் உருவாகும். குழந்தைகளின் ஆரோக்கியத்தில் மிகுந்த கவனம் தேவை. பெண்களின் அறிவுத்திறன் கூடும். பண விஷயங்களில் மிகவும் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. செல்வாக்கு மிக்க நபர்களின் உதவிகள் மூலம் பொருளாதார நிலைகள் உயர்ந்து வலுப்பெறும். சிறு தொழில் புரிபவர்களுக்கு வங்கிக் கிடைக்கும்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரம் நல்ல பல கருத்துக்களை கேட்பதின் மூலம் உங்களுக்கு ஞான தன்மை அதிகரிக்கும். பக்தி மார்க்கத்தில் செல்ல மனை வியின் பூரண ஒத்துழைப்பு கிடைக்கும். புதிய கொள்முதல் மூலம் தொழிலில் அதிகமாக வருவாய் பெருக்கம் ஏற்படும். தூர தேசங்களில் இருந்து எதிர்பார்த்த நல்ல செய்திகள் வரும். சுபகாரியச் செலவுகள் ஏற்படும். புதிய முயற்சிகள் பண வருமானம் அதிகரிக்கும். வாடிக்கையாளரிடம் நட்புப் பாராட்டும் வியாபாரிகளுக்கு அதிக இலாபம் கிடைக்கும். அழகிய ஆடை ஆபரணங்கள் வாங்குவீர்கள்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

இந்த வாரம் திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் நடக்கும். உயர்ரக வாகனங்கள் வாங்கும் யோகம் அமையும். பணம் சம்பாதிப்பதில் ஆக்கமும், ஊக்கமும் ஏற்படும். பல புண்ணியத் தலங்களுக்கு பயணம் செய்யும் வாய்ப்பு கிட்டும். சிலர் பிறரால் குற்றம் சாற்றப்பட்டு அவதிப்பட நேரலாம். பணிபுரியும் பெண்கள் பதவி உயர்வுகளை எதிர்பார்க்கலாம். சிலருக்கு ஓரளவு பணவரவு இருக்கும். உடன் பிறந்தவர்களுடன் அனுசரித்துச் செல்வது நல்லது.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் சுபச் செய்திகள் எதிர்பார்க்கலாம். உங்களுக்கு மிக்க அனுகூலமான வாரம். பல வழிகளிலும் தனவரவு ஏற்படும். எந்தக் காரியத்தையும் திறம்படச் செய்யும் உங்கள் செயல்திறன் கூடும். அதன் காரணமாக உங்கள் பணி இலக்கை அடைவீர்கள். சிலருக்கு மற்றவர்களுக்கு ஆணையிடும் உயர் பதவி கிடைக்கும். புதிதாக வேலை தேடுபவர்களுக்கு நல்ல காலம் பிறக்கும். பொருளாதார நிலைகள் திருப்திகரமாக இருக்கும்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

தனவரவு அதிகரிப்பால் குடும்பத்தில் மகிழ்ச்சியும் அதிகரிக்கும். நவநாகரீக ஆடைகள் வாங்கி உடுத்தி மகிழ்வதோடு, உறவுகள் வருகையால் உள்ளம் மகிழும். உறவுகளுடன் உயர்தர உணவகங்களில் உணவருந்தி மகிழ்வீர்கள். சிலருக்கு வீண் பேச்சு, வீண் அலைச்சல் மற்றும் வீண் செலவுகள் ஏற்படும். மிகப் பெரிய சாகசங்களைப் புரிவீர்கள். அதிகாரிகளுடன் வீண் சச்சரவுகளை விலக்கினால் பணியில் எதிர்பார்த்த உயர்வுகள் இருக்கும்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம் உறவுகளை அனுசரித்து சென்றால் அவர்களின் உதவிகள் கேட்காமலே கிடைக்கும். ஆடம்பரச் செலவுகளை குறைத்தால் பொருளாதாரச் சிக்கல்களில் இருந்து மீளலாம். மாணவர்கள் தங்கள் கல்வியில் முழு கவனம் செலுத்தினால் மட்டுமே அதிக மதிப்பெண்கள் பெற இயலும். வேலையில் சிரத்தையும், கடின உழைப்பு தொழிலில் நல்ல முன்னேற்றங்களைத் தரும். அப்போதுதான் உங்கள் கஜானாவும் பணத்தால் நிரம்பும்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

இந்த வாரம் பல வழிகளிலும் இருந்தும் பணம் கூடுதலாக வரும். மனைவியுடன் கருத்து வேறுபாடு ஏற்படாது இருக்க அனுசரித்துச் செல்வது நல்லது. எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு தொழிலில் புதிய திட்டங்களைத் தீட்டி முன்னேற முயல்வீர்கள். உறவுகள் வருகையால் சந்தோஷம் பெருகுவது போல், செலவுகளும் அதிகரிக் கும். சிறப்பான பொதுசனத் தொடர்பு காரணமாக உபரி வருமானம் கிடைக்கும். நண்பர்கள் மற்றும் உறவினர்களுடன் வீண் வாக்குவாதம் செய்யாதிருப்பது நல்லது.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இந்த வாரம் மிகுந்த உற்சாகத்துடன் பக்தி மார்க்கத்தில் ஈடுபடுவீர்கள். கடின உழைப்பால் நீங்கள் பெறும் வெற்றிகளால் அனைவரின் பாராட்டையும் பெறுவீர்கள். மங்கையரால் மன மகிழ்ச்சியும், அரசாங்கத்தால் இலாபமும் ஏற்படும். சம்பாதித்த பணத்தை புதிய முதலீட்டுத் திட்டங்கள் மூலம் சேமிக்க முற்படுவீர்கள். நீண்ட நாட்களுக்குப் பின்னர் வந்த பழைய உறவுகளின் வரவு மகிழ்வைத் தரும். பணிபுரியும் பெண்களுக்கு தற்போது இருக்கும் வேலையை காட்டிலும் நல்ல வேலைக்குப் போகும் வாய்ப்புகள் அமையும். பல வகையான உயர்ந்த வாகன வசதி அமையும். சிலருக்கு தகுந்த வரன் கிட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய மக்கள் சக்தியின் தலைவருக்கு எதிராக ஜனாதிபதி கிளப்பிய இனவாதச் சர்ச்சை!



வீரகத்தி தனபாலசிங்கம்

தென்னிலங்கையில் இனவாதப் பிரசாரங்கள் இல்லாத ஒரு சூழ்நிலை இந்த தடவை ஜனாதிபதி தேர்தலில் முக்கியமாக அவதானிக்கக் கூடியதாக இருக்கும் ஒரு அம்சமாகும். பிரதான வேட்பாளர்கள் சகலரும் சிறுபான்மைச் சமூகங்களின் ஆதரவை நாடி நேசக்கரம் நீட்டுவதே அதற்கு முக்கிய காரணமாகும்.

எந்தவொரு பிரதான வேட்பாளருமே ஐம்பது சதவீதமான வாக்குகளை பெறுவது சாத்தியமில்லை என்று நம்பப்படுவதால், அவர்கள் வெற்றி பெறுவதற்கு சிறுபான்மைச் சமூகங்களின் வாக்குகள் இன்றியமையாதவையாக இருக்கின்றன. முன்னைய ஜனாதிபதி தேர்தல்களைப் போலன்றி இந்த தடவை பிரதான வேட்பாளர்கள் பிரசாரங்களுக்காக அடிக்கடி வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு செல்கிறார்கள்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் பிரதான வேட்பாளர்கள் தங்களது தேர்தல் விஞ்ஞாபனங்களில் அளித்திருக்கும் வாக்குறுதிகளை சிறுபான்மைச் சமூகங்களைச் சேர்ந்த மக்கள் நம்புகிறார்களோ இல்லையோ அது வேறு விடயம். ஆனால், அரசியலமைப்புக்கான 13 வது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது உட்பட அதிகாரப் பரவலாக்கம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரா குமார திசாநாயக்க மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச ஆகியோரின் வாக்குறுதிகளில் ஒப்பீட்டளவில் ஒரு சங்கமம் காணப்படுகிறது.

வடக்கு, கிழக்கின் எதிர்கால அபிவிருத்தி குறித்து அவர்கள் உறுதிமொழிகளை அள்ளி வீசுகிறார்கள். சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் நாமல் ராஜபக்ச யாழ்ப்பாணத்தை சிலிக்கன் பள்ளத்தாக்கின் இலங்கை வடிவமாக மாற்றப்போவதாகவும் கூட கூறுகிறார்.

தங்களது அரசியல் வாய்ப்புக்களுக்காக இனவாதத்தையே முற்றுமுழுதாக நம்பியிருக்கும் சில தென்னிலங்கை அரசியல்வாதிகளின் குரல்களை தற்போதைய பிரசாரங்களில் பெரிதாக கேட்கக்கூடியதாக இல்லை.

இதனிடையே, விசித்திரமான ஒரு திருப்பமாக, அநுரா குமார இனவாதத்தை தூண்டிவிட முயற்சிக்கிறார் என்ற ஒரு குற்றச்சாட்டை கடந்தவாரம் ஜனாதிபதி விக்கிரமசிங்க முன்வைத்ததை காணக்கூடியதாக இருந்தது.


யாழ்ப்பாணத்தில் தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் உரையாற்றிய விக்கிரமசிங்க வடபகுதி மக்களை பயமுறுத்தி அவர்கள் மீது அநாவசியமாக நெருக்குதலை பிரயோகிப்பதற்காக அநுரா குமார அந்த மக்களிடம் மாத்திரமல்ல சிங்கள மக்களுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தியதற்காக அவர்களிடமும் மன்னிப்புக் கேட்கவேண்டும் என்று வலியுறுத்தினார்.


தென்னிலங்கையில் மக்கள் ஒரு மாற்றத்துக்காக அணிதிரளும்போது வடபகுதி மக்கள் அதை எதிர்த்தால் தெற்கில் உள்ள மக்களின் மனநிலை எவ்வாறு இருக்கும் என்பதை கற்பனை செய்து பார்க்குமாறு தேசிய மக்கள் சக்தியின் தலைவர் வடக்கில் பிரசாரக் கூட்டம் ஒன்றில் தமிழ் மக்களை நோக்கி கேட்டதையடுத்தே ஜனாதிபதியிடம் இருந்து இந்த குற்றச்சாட்டு வந்தது.

தென்னிலங்கை மக்களின் விருப்பத்துக்கு மாறாக வடபகுதி மக்கள் தேர்தலில் வாக்களிக்கக்கூடாது என்று அநுரா குமார தமிழர்களை அச்சுறுத்துகிறார் என்று அவரின் கருத்தை ஜனாதிபதி அர்த்தப்படுத்துகிறார் என்பது தெளிவானது. வடபகுதி மக்கள் தங்களது வாக்களிக்கும் முறையை மாற்றக்கூடாது என்றும் ஜனாதிபதி அவர்களிடம் வேண்டுகோள் விடுத்தார்.

" 2010 ஜனாதிபதி தேர்தலில் தென்னிலங்கை மக்கள் மகிந்த ராஜபக்சவுக்கு வாக்களித்தபோது நீங்கள் சரத் பொன்சேகாவுக்கு வாக்களித்தீர்கள். ஆனால், உங்களுக்கு எதுவும் நடக்கவில்லை. 2015 தேர்தலில் நீங்கள் மைத்திரிபால சிறி சேனவுக்கு வாக்களித்த அதேவேளை தெற்கு மக்கள் மகிந்த ராஜபக்சவுக்கு வாக்களித்தார்கள். உங்களுக்கு எதுவும் நடக்கவில்லை.

"2019 தேர்தலில் நீங்கள் சஜித் பிரேமதாசவுக்கு வாக்களித்தீர்கள். ஆனால் தெற்கில் மக்கள் கோட்டாபய ராஜபக்சவுக்கு வாக்களித்தார்கள். கோட்டாபய உங்களை துன்புறுத்தவில்லை. அதனால் நீங்கள் வாக்களித்து வருகின்ற முறையை மாற்றாதீர்கள். உங்களுக்கு எந்த ஆபத்தும் வராமல் இருப்பதை நான் உத்தரவாதப்படுத்துவேன் . அநுரா குமாரவுக்கோ அல்லது சஜித்துக்கோ வாக்களித்து உங்கள் வாக்குரிமையை வீணாக்காதீர்கள் " என்று விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்தில் மக்களை நோக்கி கூறினார்.





**அநுரா குமார போன்றவர்களை இனவாதிகள் என்று அழைப்பதை விட இனவாதத்தின் கைதிகள் என்று அழைப்பதே பொருத்தமானதாக இருக்கும்.**

ஜனாதிபதியின் இந்த கருத்துக்களை எவ்வாறு விளங்கிக்கொள்வது என்று புரியவில்லை. தென்னிலங்கை மக்கள் வாக்களித்து வந்திருக்கும் முறைக்கு மாறாக வழமை போன்று வடபகுதி மக்கள் வாக்களிக்க வேண்டுமென்றால், அநுரா குமாரவை அல்லது சஜித்தை தென்னிலங்கை மக்கள் ஆதரிக்கவிருப்பதால் தமிழ் மக்கள் அதற்கு எதிராக தனக்கு வாக்களிக்க வேண்டும் என்று அவர் கேட்கிறாரா? தன்னை தென்பகுதி மக்கள் இந்த தடவை ஆதரிக்கப்போவதால் தமிழ் மக்களும் அவர்களைப் பின்பற்றி தன்னை ஆதரிக்கவேண்டும் என்று ஏன் ஜனாதிபதியினால் கூறமுடியவில்லை? அதனால் இதுவரை ஜனாதிபதி தேர்தலில் வாக்களித்த முறையை மாற்றக்கூடாது என்ற விக்கிரமசிங்கவின் வேண்டுகோள் ஒரு புதிராக இருக்கிறது.

ஜனாதிபதியின் குற்றச்சாட்டுக்கு பதிலளித்த அநுரா குமார வடபகுதி மக்களிடம் தன்னை மன்னிப்புக் கேட்குமாறு சவால் விடுப்பதை விடுத்து யாழ்ப்பாணத்தில் பிரசாரக்கூட்டத்தில் இனவாதத்தை தூண்டியதற்காக ஜனாதிபதியே வடபகுதி மக்களிடம் மன்னிப்புக் கேட்கவேண்டும் என்று கூறினார்.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் ஏற்கெனவே சிறந்த பதிலை வழங்கி விட்டதால் ஜனாதிபதிக்கு பதிலளிக்கவேண்டிய தேவை தனக்கு இல்லை என்று குறிப்பிட்ட அநுரா குமார " இனவாதத்தை தூண்டுகின்ற அரசியல் இந்த நாட்டை விட்டு இப்போது போய்விட்டது. அந்த அரசியல் இனிமேல் இலங்கையில் வெற்றி பெறப் போவதில்லை " என்று தெரிவித்தார்.

சிறுபான்மைச் சமூகங்களும் தனது வெற்றியில் பங்காளிகளாக வேண்டும் என்று விரும்பியதாகவும் ஆனால் அவர்கள் தன்னுடன் இணைந்து கொள்ளவில்லை என்று கோட்டாபய ராஜபக்ச 2019 நவம்பரில் அநுராதபுரத்தில் வைத்து பதவியேற்றபோது கூறிய கருத்தின் தொனியில் அநுரா குமாரவின் கருத்து அமைந்திருப்பதாகவும் கூட வியாக்கியானம் செய்யப்படுகிறது.

அதேவேளை, தேசிய மக்கள் சக்தியின் தலைவரை நியாயப்படுத்த அவரது தோழர்களே ஓடிவருவதற்கு முன்னதாக பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அநுரா குமாரவின் கருத்துக்கள் இனவாதத்தை தூண்டும் நோக்குடனானவை அல்ல என்று உடனடியாகவே செய்தியாளர்களிடம் கூறினார்.

"தோழர் அநுரா குமார எந்தவிதமான இனவாத உணர்வுடனும் அந்த கருத்துக்களை யாழ்ப்பாணத்தில் கூறவில்லை என்று நான் நினைக்கிறேன். நான் அவரை நன்றாக அறிவேன். அவர் அத்தகைய மனிதர் அல்ல. உண்மையில் அவர் இந்த நாட்டில் இருந்து இனவாதத்தை ஒழிப்பதில் பெரும் அக்கறை கொண்டவராக இருக்கிறார். அதனால் எமக்கு இந்த சர்ச்சையில் வேறுபட்ட எந்த உணர்வும் இல்லை " என்று சுமந்திரன் கூறினார்.

ஜனாதிபதி தேர்தலில் இலங்கை தமிழரசு கட்சி எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு வழங்கும் ஆதரவை மீண்டும் உறுதிப்படுத்திய சுமந்திரன் பிரேமதாசவுக்கு தாங்கள் ஆதரவை வழங்குவதற்கு தீர்மானித்த போதிலும், பொதுவான குறிக்கோள்களில் குறிப்பாக தவறான ஆட்சிமுறையையும் ஊழலையும் ஒழித்துக் கட்டுவதில் அநுரா குமாரவுடன் இணைந்து செயற்படத் தயாராயிருப்பாகவும் குறிப்பிட்டார்.

ஆனால், ஜனாதிபதி விக்கிரமசிங்க தேசிய மக்கள் சக்தி தலைவர் வடபகுதி மக்களிடம் மன்னிப்புக் கேட்கவேண்டும் என்று தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் தொடர்ந்தும் பேசியதை காணக்கூடியதாக இருந்தது. தனக்கு வாக்களிப்பதற்கு தமிழர்கள் தவறினால் இனமோதலுக்கு முகங்கொடுக்க வேண்டியிருக்கும் என்பதே அநுரா குமாரவின் பேச்சின் மறைமுகமான செய்தி என்று ஜனாதிபதியை ஆதரிக்கும் ஒரு கட்சியின் தலைவரும் கடந்த வாரம் கூறினார்.

ஜனாதிபதி கிளப்பிய சர்ச்சையை வடபகுதி மக்களோ அல்லது தமிழ் அரசியல் கட்சிகளோ அல்லது சிங்கள மக்களோ பொருட்படுத்தியதாக தெரியவில்லை. விக்கிரமசிங்கவை போன்ற அனுபவமிக்க ஒரு அரசியல் தலைவர் அதுவும் இனவாதக் கருத்துக்களை சிங்கள மக்கள் மத்தியில் பேசாத ஒருவர், தேர்தலில் தனது போட்டியாளர்களில் ஒருவருக்கு எதிராகப் பயன்படுத்துவதற்கு இன்றைய சூழ்நிலையில் எந்த விதத்திலும் பொருத்தமில்லாத ஒரு விவகாரத்தை பெரிதுபடுத்தி தன்னை ஒருவிதமான பொருந்தாத்தன்மைக்கு ஆளாக்கிக்கொண்டார் என்றுதான் கூறவேண்டும்.

தேசிய மக்கள் கட்சியின் பிரதான அங்கத்துவக் கட்சியான ஜனதா விமுக்தி பெரமுன ( ஜே.வி.பி. ) இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு இதுகால வரையில் முன்னெடுக்கப்பட்ட சகல முயற்சிகளையும் கடுமையாக எதிர்த்த ஒரு எதிர்மறையான வரலாற்றைக் கொண்டிருக்கிறது. ஆனால், இலங்கை அரசியலின் எதிர்காலத்தை தீர்மானிக்கக்கூடிய முக்கியமான அரசியல் சக்தியாக வளர்ந்துவிட்ட அந்த கட்சியை தொடர்ந்தும் அதன் கடந்த காலத்தின் பணயக் கைதியாக வைத்திருக்க முயற்சிப்பது பொருத்தமானதல்ல. அவர்களிடம் காணப்படக்கூடியதாக இருக்கின்ற ஒப்பீட்டளவிலான மாற்றங்களை ஊக்குவிப்பதே ஆரோக்கியமான அணுகுமுறையாக இருக்கும்.

ஆனால், சிறுபான்மைச் சமூகங்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளையும் மனக்குறைகளையும் பெரும்பான்மையின மக்கள் மத்தியில் எடுத்துக் கூறுவதன் மூலமாக அரசியல் தீர்வுக்கும் அதிகாரப் பரவலாக்கலுக்கும் எதிராக தென்னிலங்கையில் வேரூன்றியிருக்கும் அரசியல் உணர்வுகளை தணிப்பதற்கு தங்களை அர்ப்பணிக்க தேசிய மக்கள் சக்தியின் தலைவர்கள் தயாராயில்லை என்பது கசப்பான உண்மை. அதை அவர்கள் மறுக்கமுடியாது.

இரு வாரங்களுக்கு முன்னர் வெளியிடப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனங்களில் ஜனாதிபதி விக்கிரமசிங்கவும் எதிர்க்கட்சி தலைவர் பிரேமதாசவும் அரசியலமைப்புக்கான 13 வது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதாக வாக்குறுதி அளித்திருக்கும் அதேவேளை அநுரா குமார அதைப் பற்றி எதுவும் கூறவில்லை.

13 வது திருத்தம் பற்றி எதையும் குறிப்பிடுவதை தவிர்க்க வேண்டும் என்ற நோக்கத்துக்காகவே அநுரா குமார தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் 2015 - 2019 காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்ட அரசியலமைப்பு வரைவுச் செயன்முறையை துரிதமாக நிறைவுசெய்து மாவட்டங்களுக்கும் மாகாணங்களுக்கும் அரசியல் மற்றும் நிருவாக அதிகாரங்களை வழங்குவதாக உறுதியளித்திருப்பதாக தமிழர் தரப்பில் விமர்சனங்கள் உண்டு.

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதித் தேர்தல் 2024

"தோன்றி மறைந்து சிதைந்து மறுபடியும் மறுபடியும் புதியன தோன்றும்"

இது வழமையான ஜனாதிபதி தேர்தலா - இல்லவே இல்லை. இம்முறை உங்களின் மனச்சாட்சியின் அடையாளமாக, ஒரு தமிழ் பொது வேட்பாளர் உங்கள் முன்னால் இருக்கின்றார். இப்போது நீங்கள் என்ன செய்யப் போகின்றீர்கள்? அவரை நீங்கள் தோற் கடிக்கப் போகின்றீர்களா? அவமானப்படுத்தப் போகின்றீர்களா? அடுத்த மாதம் 21ஆம் திகதி, உங்களின் மன்னசாட்சிக்கான பரீட்சையாகும். இந்தப் பரீட்சையில் - நீங்கள், உங்கள் மனச்சாட்சியை கொல்லப் போகின்றீர்களா அல்லது வெல்லப் போகின்றீர்களா? உங்கள் தீர்ப்பு எதுவானாலும், அதனை வரலாறு பதிவு செய்யும்.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் முதல் முறையாக ஒரு தமிழ் பொது வேட் பாளர் களமிறங்கியிருக்கின்றார். உங்களுக்குள் சில கேள்விகள் இருக்கலாம் - ஏன் ஒரு தமிழ் பொது வேட்பாளர்? அவரால் என்ன செய்து விட முடியும்? அவரால் இலங்கையின் ஜனாதிபதியாக வர முடியுமா? அவர் ஜனாதிபதியாக வரப்போவதில்லை என்றால், பின்னர் எதற்காக அவர் போட்டியிட வேண்டும்? அவ்வாறாயின் அவருக்கு வாக்களிப்பதால் என்ன கிடைக்கும்?

அன்புக்குரியவர்களே! இப்படியான சில கேள்விகளுக்கு, இன்னும் சில கேள்வி களைத்தான் பதிலாகத் தர முடியும்.

சிறிலங்காவின் ஜனாதிபதி தேர்தல்களின் போது, நீங்கள் வழமையாகவே, ஒரு தென்னிலங்கை வேட்பாளருக்குத்தானே வாக்களிப் பதுண்டு. அவர்களுக்கு வாக்களித்த தால், இது வரையில், நீங்கள் அடைந்தது என்ன? 2010இல், யுத்தத்தை வழிநடத்திய இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவிற்கும் வாக்களித்தீர்களே! தொடர்ந்தும் யாரோ ஒரு தென்னிலங்கை வேட்பாளருக்கு வாக்களித்ததால், நீங்கள் கண்டதுதான் என்ன? மீண்டும், மீண்டும் ஏமாற்றப்பட்டதைத் தவிர, வேறு எதைக் கண்டோம்? இப்படியே ஏமாந்து கொண்டி ருப்பதுதான் தமிழினத்தின் அரசியல் தலைவிதியா? தமிழினத்தை எப்படியும் ஏமாற்ற லாம் - ஏமாற்றிக் கொண்டே இருக்கலாம் என்று எண்ணுபவர்களுக்கு, நீங்கள் ஒரு பதிலைச் சொல்லவேண்டாமா? இப்படியும் எங்களால் சிந்திக்க முடியும் என்பதை நிரூபிக்க வேண்டாமா?

தேர்தல் காலங்களில், தென்னிலங்கை வேட்பாளர்கள், பல வாக்குறுதிகளுடன், உங்களைத் தேடி வருவதுண்டு. ஆனால் அவர்கள் எவருமே, ஒரு பேச்சுக்குக் கூட, தமிழ் மக்களின் நியாயமான அரசியல் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்ட வரலாறு உண்டா? தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் - வடக்கு கிழக்கு அவர்களின் வரலாற்று பூமி - தமிழ் மக்களின் நியாயமான பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டியது அவசி யம் - இவை எவற்றையுமே, எந்தவொரு தென்னிலங்கை வேட்பாளர்களும், வெளிப்படையாக ஏற்றுக் கொண்டதில்லை. இன்று சிலிண்டரிலும், தொலைபேசியிலும், உங்களின் வாக்குகளை யாசகம் கேட்கும் எவருமே, தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினையை வெளிப்படையாக ஏற்றுக்கொள்ளத் திராணியற்றவர்களாகவே இருக்கின்றனர். இந்த நாட்டில் இருப்பது ஒரேயொரு பிரச்சினைதான் - அது பொருளாதாரப் பிரச்சினை மட்டும்தான் - தேசிய இனப்பிரச்சினை என்று ஒன்றில்லை என்பதுதான், தென்னிலங்கையின் பிரதான வேட்பாளர்கள் அனைவரதும் நிலைப்பாடாகும்.

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு தொடர்பில் வெளிப்படையாக பேசி னால், சிங்கள மக்களின் வாக்குகள் தங்களுக்கு இல்லாமல் போய்விடுமென்றே அனை வரும் எண்ணுகின்றனர். ஜனாதிபதி தேர்தல்களில், போட்டியிடும் ஒவ்வொரு பிரதான தென்னிலங்கை வேட்பாளர்களும் இப்படித்தான் சிந்திக்கின்றனர். தமிழ் வாக்குக ளின் உதவியுடன் அதிகார நாற்காலியில் அமர்கின்றனர். ஆனால் தேர்தல் முடிந்ததும் - ஆற்றை கடக்கும் வரைக்கும் தான் அண்ணன் தம்பி, ஆற்றை கடந்தவுடன், நீ யாரோ - நான் யாரோ என்பது போலவே நடந்து கொள்கின்றனர். இது, தென்னிலங்கை ஆட்சியா ளர்களின் வாழையடி வாழைப் பிரச்சினை.

இந்த நிலைமையை மாற்றும் வகையில் ஒரு புதிய அரசியல் விதியை, உங்களால் உருவாக்க முடியாதா? கொள்கை வழி சிந்தித்து, அந்தக் கொள் கைக்காக ஆயிரக் கணக்கானவர்களை ஆகுதியாக்கிய தமிழினம் நினைத்தால், இம்முறை தேர்தலில் ஒரு புது விதியை உருவாக்க முடியாதா? நிச்சயம் உங்களால் முடியும்.


இம்முறை தமிழ் மக்களின் வாக்குகள் தமிழ் பொது வேட்பாளருக்கு மட்டும் தான் என்னும் வரலாற்று முடிவை நீங்கள் எடுப்பீர்களானால், தமிழ் மக்களை எல்லாக் காலத்திலும் ஏமாற்றிக் கொண்டேயிருக்கலாம் - என்று, எண்ணிக் கொண்டிருப்பவர்களுக்கு ஓர் உறுதியான செய்தியை சொல்ல முடியும். அந்தச் செய்தி தென்னிலங்கைக்கு மட்டுமல்ல - கூடவே, இலங் கைத் தீவின் அரசியலை அவதானித்துக் கொண்டிருக்கும் வெளிநாடுகளுக்கும் ஒரு செய்தியைச் சொல்லும்.

அந்தச் செய்தி...

நாங்களும் இந்தத் தீவின் தனித்துவமான சொந்தக்காரர்கள்தான். வடக்கு - கிழக்கு எங்களின் வரலாற்று தாயகமாகும். இந்த அடிப்படையிலான அரசியல் தீர்வுக்கு நாம் உரித்துடையவர்களாவர். யுத்தத்தின் முடிவு, தமிழினத்தின் உரிமைக் கோரிக்கை களின் முடிவல்ல - அது முடிந்தும் விடாது. தமிழ் மக்களுக்கான நியாயமான அரசியல் தீர்வு என்பது அடிப்படையில் ஒரு ஜனநாயக கோரிக் கையாகும் அதுவே இலங்கைத் தீவின் எரியும் ஒரேயொரு பிரச்சினையாகும். வெறும் பொருளாதார பிரச்சினை என்னும் மாயமானை காண்பித்து, எங்களை ஏமாற்றிவிட, நாங்கள் ஒருபோதுமே அனுமதிக்கப் போவ தில்லை - ஏனெனில், பொருளாதார பிரச்சினை என்பது அடிப்படையில் தேசிய இனப் பிரச்சினையின் விளைவாகும். எமது ஜனநாயகத்தை, எவருக்காகவும் நாம் சமரசம் செய்யமாட்டோம்.


சங்கு சின்னத்திற்கு நீங்கள் அளிக்கும் ஒவ் வொரு புள்ளடியும் இந்த உண்மை யின் சாட்சியாகும். தமிழ் பொது வேட்பாளர் என்பது ஓர் அடையாளம் மட்டுமே. அடை யாளத்தை நோக்கி நீங்கள் வாக்குகளால் சேரும் போது, அது ஒரு ஜனநாயக பலமாக உருமாறும். ஜன நாயகத்தை பலமாகவும், பாலமாகும் மாற்றும் ஆற்றல் கொண்ட இனம் மட்டுமே, வரலாற்றில் ஒரு இனமாக நிலைபெற முடியும். தமிழ் மக்கள் ஒன்றாக சிந்திக்கின்றனர் என்னும் ஜனநாயக அரசியலே நமது ஒரேயொரு பலமாகும்.

நீங்கள் சங்கு சின்னத்திற்கு வாக்களிக்கத் தவறினால் - அதனை உதாசீனம் செய்தால் - அவமதித்தால், நீங்கள் பல்லாயிரக்கணக்கானவர் களின் தியாகத்தினால் உரம்பெற்ற அரசியல் கோரிக்கையை காலால் மிதிக்கின்றீர்கள் - என்பதே அதன் பொருளாகும் - உங்கள் மனச் சாட்சியை கொல்லுவதா அல்லது வெல்லுவதா? தீர்மானியுங்கள்.



## தமிழ் பொது வேட்பாளர்
## பா. அரியநேத்திரன்

## "பொங்கு தமிழர்க்கு இன்னல் விளைவித்தால் சங்காரம் நிஜமென்று சங்கே முழங்கு"



## தமிழ் தேசிய பொதுக் கட்டமைப்பு

'மக்கள் மனு' வடக்கு கிழக்கு சிவில் சமூக குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# வீட்டைச் சிதைத்து தமிழினத்தை அழிக்கும் ஒட்டகத்துக்கு கருங்குறியிடும் நாளில் தமிழரின் ஒற்றைக் குரலாக சங்கே முழங்கு!


பனங்காட்டான்

நாடு முழுவதுமுள்ள மக்கள் ஊர் ஊராகத் திரண்டு ஒரு தேரை இழுக்கும் பெருந்திருவிழாக் காலம் இது. சிங்கள மக்களின் அனைத்து நலன்களையும் உரிமைகளையும் பாதுகாக்கவென சிங்கள பௌத்தர் ஒருவரை ஜனாதிபதியாகத் தெரிவதற்கான தேர்தல் வாரம் இது.

கடந்த ஒரு மாதமாக மூன்று பிரதான வேட்பாளர்களான ரணில், சஜித், அநுர ஆகியோரிடமிருந்து எக்கச்சக்கமான வாக்குறுதிகளை கேட்டாயிற்று. இவர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்கள் மேலும் என்னென்னவோ உறுதிகளைத் தெரிவித்துள்ளன.

தினமும் இதனூடாக பயணிக்கும் ஒருவரால் வெல்லப்போவது யார் என்ற குழப்ப நிலையில் மனநலம் நிச்சயம் பாதிக்கப்பட்டிருக்கும். சஜித்துக்கும் அநுரவுக்குமிடையே கடும் போட்டி என்று ஒரு செய்தி வரும். ரணிலும் அநுரவும் ரகசிய ஒப்பந்தம் என்று இன்னொரு செய்தி கூறும். ரணிலின் வெற்றியை ஆமையும் முயலும் கதையுடன் ஒப்பிட்டு மற்றொரு செய்தி தெரிவிக்கும். எல்லாமே சிதம்பர சக்கரம்தான். இதற்கிடையே நாமலையும் ஊடகங்கள் அவ்வப்போது தடவிப் பார்க்கின்றன.

இந்த மாதம் 21ம் திகதி சனிக்கிழமை தேர்தல் நாள். ஒரு கோடி எழுபது லட்சத்துக்கும் அதிகமானோர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். மொத்தம் 13,417 வாக்குச் சாவடிகள் அமைக்கப்படுகின்றன. வாக்களிப்போர் தம்முடன் கைத்



தொலைபேசியை சாவடிக்குள் எடுத்துச் செல்ல முடியாது. 18ம் திகதி இரவுடன் பரப்புரைக் கூட்டங்கள் நிறைவுபெறும்.

கட்டுப்பணம் செலுத்திய 38 பேரில் 19 பேரைக் காணவில்லையென்று சொல்லப்படுகிறது. இவர்கள் தமக்கான பாதுகாப்பையும் இதுவரை கேட்கவில்லை. தங்களுக்கான இரண்டாவது அல்லது மூன்றாவது வாக்கை இன்னொருவருக்கு பெற்றுக் கொடுக்கும் பினாமி வேட்பாளர்கள் இவர்கள்.

தேர்தல் ஆணைக்குழுவின் அறிவித்தலின் பிரகாரம் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டு பதவி ஏற்பவர் அடுத்து வரும் பத்து அல்லது பன்னிரண்டு நாட்களின் பின்னர் நாடாளுமன்றத்தைக் கலைக்க முடியும். ஆனால், இது கட்டாயம் என்றில்லை. (அநுர குமார திசநாயக்க தாம் ஜனாதிபதியானால் மறுநாளே நாடாளுமன்றத்தைக் கலைப்பேன் என்று கூறுவது வெறும் பேச்சு மட் டுமே).

ஜனாதிபதித் தேர்தலில் வழக்கம் போல சிங்களவர் ஒருவரே வெற்றி பெறுவார். சிங்கள பௌத்தர்களின் வாக்குகளைவிட பல சிறுபான்மை இனத்தவரின் வாக்குகள் அங்குமிங்கு மாகக் கிடைக்கும். இவர்களுள் தமிழர் தாயகத்துக்கு வெளியே வாழும் தமிழர்களின் வாக்குகளும் அடங்கும்.

ஆனால், தமிழ் வேட்பாளர்கள் போட்டியிட்ட ஜனாதிபதித் தேர்தல்களில் 22 தேர்தல் மாவட்டங்களிலிருந்தும் இவர்களுக்கு வாக்குகள் கிடைத்தன. முதலாவது ஜனாதிபதித் தேர்தல் 1982ம் ஆண்டு இடம்பெற்றபோது அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி சார்பில் குமார் பொன்னம்பலம் போட்டியிட்டார். அப்போது பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை 81,45,000 வரையானது. இதில் சுமார் 66 இலட்சம் வரையானவர்களே வாக்களித்தனர். அப்போது குமார் பொன்னம்பலம் 1,75,000 வரையான வாக்குகள் பெற்றி ருந்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் முதலாவது இடத்தில் 87,263 வாக்குகள் இவருக்குக் கிடைத்தன. சிறிலங்கா சுதந்திர கட்சியின் ஹெக்டர் கொபேகடுவவும், ஐக்கிய தேசிய கட்சியின் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவும் இங்கு முறையே இரண்டாம் மூன்றாம் இடங்களுக்குத் தள்ளப்பட்டனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் 999 மேலதிக வாக்குகளால் ஜெயவர்த்தன முதலிடத்துக்கு வந்தார். இங்கு குமார் பொன்னம்பலத்துக்கு 47,095 வாக்குகள் கிடைத்தன. சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழும் தென்னிலங்கையில் அம்பாந்தோட்டை, மாத்

**ஜனாதிபதியாக எவர் வந்தாலும் ஒரு கதிரை இச்சையால் தமிழ்ப் பொதுவேட்பாளரை தோற்கடிக்கச் சபதம் பூண்டு, தமிழரசுக் கட்சியை நிர்மூலமாக்கி வருபவரை அடையாளம் காட்டுவதற்கான நாள் செப்டம்பர் 21. இந்நாளே, தமிழ்த் தேசியத்தை எண்திசையும் எடுத்துச் செல்லும் ஏகோபித்த சின்னமாக விளங்கட்டுமென சங்கே முழங்கு.**

தறை, காலி மாவட்டங்களில் குமார் பொன்னம்பலத்துக்கு 1,200க்கும் மேலான வாக்குகள் இடப்பட்டன. 22 தேர்தல் மாவட்டங்களிலும் இவருக்கு வாக்களிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

எம்.கே. சிவாஜிலிங்கம் இரண்டு ஜனாதிபதித் தேர்தல்களில் தன்னிச்சையாகப் போட்டியிட்ட வேளையிலும் 22 மாவட்டங்களிலும் இவர் வாக்குகளைப் பெற்றிருந்தார். இந்த விடயங்களை இங்கு குறிப்பிடுவதற்கான முக்கிய காரணம் இப்போதைய ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளருக்கு தமிழர் தாயகமான வடக்கிலும் கிழக்கிலும் மட்டும்தான் வாக்குகள் கிடைக்குமென்ற சிலரது தப்பான அபிப்பிராயத்தை நீக்கவே.

தமிழ்ப் பொதுவேட்பாளர் என்ற எண்ணக்கரு பல வருடங்களாக முளைவிட்ட போதிலும் இந்த வருடத்திலேயே அதற்கு உருவம் கொடுக்கப்பட்டது. அப்போது பலரும் இதனை ஒரு பகிடிக் கதையாகவே கருதினர். உது சரிப்பட்டு வராது என்றும் சிலர் கூறியதுண்டு. உங்களால் ஒரு பொதுவேட்பாளரை கண்டுபிடிக்க முடியுமா என்று ரணில் விக்கிரமசிங்க தம்மிடம் கேட்டதாக சி.வி.விக்னேஸ்வரன் பகிரங்கமாகத் தெரி



வித்திருந்தார். ரணிலின் இந்தக் கேள்வி தமிழரின் ஒற்றுமை இன்மையை நையாண்டி பண்ணும் வகையிலானது. தமிழரசுக் கட்சிக்குள்ளிருந்தும் இவ்வகையான கருத்து பரவலாக விதைக்கப்பட்டு வந்தது.

தமிழரசுக் கட்சியின் எம்.பியான சுமந்திரனுக்கு தமிழ்ப் பொதுவேட்பாளராக போட்டியிட வேண்டுமென ஒரு நப்பாசை இருந்திருக்கிறது. சரிந்து போகும் தமது செல்வாக்கை தூக்கி நிறுத்தவும், சிங்கள சமூகத்தின் முன்னால் தம்மை ஒரு தமிழ்த் தலைவராக பிம்பம் காட்டவும் அவர் விரும்பியிருக்கிறார். அதனாற்தான் பொதுவேட்பாளராக தம்மைப் போட்டியிடுமாறு சுரேஷ் பிரேமச்சந்திரன் கேட்டதாக ஒரு கதையை மெதுவாக அவிழ்த்துவிட்டார். ஆனால், சுரேஷ் பிரேமச்சந்திரன் முகத்தில் அடித்தாற்போல அதனை மறுத்தவுடன் சுமந்திரன் கப்சிப் என வாயை மூடிவிட்டார். ஆனால், அதற்காக அவர் சும்மா இருக்கவில்லை.

தமிழ்ப் பொதுவேட்பாளர் சரிவராது, சிங்களவர் ஒருவருக்கே தமிழரசு ஆதரவு வழங்கும், தமிழ்ப் பொதுவேட்பாளரை தோற்கடித்தே தீருவேன், இது தமிழரசுக் கட்சிக்கான பெரும் பொறுப்பு என்று பொதுவெளியில் அறிவிக்கவும் தொடங்கினார். ஆனால், தமிழரசுக் கட்சியின் மத்திய குழு உறுப்பினர் ஒருவரே தமிழ்ப் பொதுவேட்பாளராக களம்' இறங்குவாரென சுமந்திரன் கனவிலும் நினைத்திருக்கவில்லை.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பை உருவாக்கிய விடுதலைப் புலிகளின் தெரிவில்



நாடாளுமன்ற அரசியலுக்கு அழைத்து வரப்பட்டவர் திரு. அரியநேத்திரன். இரண்டு நாடாளுமன்றத் தேர்தல்களில் போட்டியிட்டு (தேசியப் பட்டியலால் அல்ல) வெற்றி பெற்றவர். ஓர் ஊடகவியலாளர். பிசகில்லாத தமிழ்த் தேசிய பற்றாளர். இதனாலேயே இவர் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுவின் உறுப்பினராக தொடர்ந்து தெரிவானவர்.

இதனை எள்ளளவும் தாங்க முடியாத சுமந்திரனும், சாடிக்கேற்ற மூடியாக விளங்கும் சாணக்கியனும் இணைந்து தமிழ்ப் பொதுவேட்பாளரை எதிர்ப்பது என்ற செயற்பாட்டில் தமிழரசுக் கட்சியையே அழிக்க முனைந்து வருகின்றனர். தமிழர் தேச அரசியலில் ஒட்டகம் என்ற அடைமொழியுடன் அறிமுகப்படுத்தப்படுபவர் சுமந்திரன். தமிழரசுக் கட்சியை அழித்து நிர்மூலமாக்கும் இலக்குடன் கொழும்பிலிருந்து இவர் இறக்கப்பட்டவர் என்பதை இவரது செயற்பாடுகள் தொடர்ந்து நிலைநிறுத்தி வருவதை பலரும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

முழுத்தமிழினத்தையும் கூறு போட்டு தமிழரசுக் கட்சியை சின்னாபின்னமாக்கி தமது சிங்கள எஜமானர்களை மகிழ்ச்சிப்படுத்தும் பணியில் சுமந்திரன் பொதுவேட்பாளரை எதிர்த்து வருகிறார். எந்தவிதமான எழுத்து ஒப்பந்தங்களும் இல்லாது ஒரு சிங்கள வேட்பாளரை ஆதரிப்பதென அவர் எடுத்த முடிவு தமிழரசுக் கட்சியை அழிவின் முடிவுக்குக் கொண்டு செல்கின்றது.

தன்னிச்சையாக தான் எடுத்த முடிவை நிலைநிறுத்துவதற்கு அடுத்தடுத்து பல பொய்களை கூறி வருகிறார். தமிழரசின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் சஜித் பிரேமதாசவுக்கு முழுமையான ஆதரவு கிடைக்கவில்லை. கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா கூட்டத்தில் பங்கேற்கவில்லை. பிரித்தானியா சென்றிருந்த சிவஞானம் சிறீதரன் எம்.பி. தமிழ்ப் பொதுவேட்பாளரை தாம் ஆதரிக்கும் முடிவை ஏற்கனவே அறிவித்திருந்தார். கூட்டத்துக்கு தலைமை தாங்கிய மூத்த துணைத்தலைவர் சி.வீ.கே.சிவஞானம் எவரும் விரும்பியவாறு வாக்களிக்கும் உரிமையை வெளிப்



படுத்தினார். கிளிநொச்சி மற்றும் திருமலை மாவட்ட கட்சிக் கிளைகள் பொதுவேட்பாளரை ஆதரிக்கும் தங்கள் தீர்மானத்தை இங்கு மீண்டும் எடுத்துக் கூறின. ஆனால், சுமந்திரன் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போது, சஜித்தை ஆதரிக்கும் முடிவு கூட்டாக எடுக்கப்பட்டதென்று அறிவித்து சஜித்துக்கே அதிர்ச்சியை ஏற்படுத்தினார்.

இந்த அறிவிப்பால் ஏற்பட்ட பிரச்சனையை தீர்ப்பதற்கு கடந்த வாரத்தில் ஐவர் கூட்டமொன்று இடம்பெற்றது. இதில் எந்த முடிவும் எட்டப்படவில்லை. பொதுவேட்பாளரை ஆதரிக்கும் தமது முடிவை சிவஞானம் சிறீதரன் மீண்டும் இங்கு வலியுறுத்தினார். கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா சஜித்தை ஆதரிக்கும் முடிவுக்கு சம்மதம் தெரிவிக்கவில்லை. இதனால் இந்த வாரத்தில் இன்னொரு தடவை கூடி முடிவெடுப்பதாகத் தீர்மானிக்கப்பட்டது. நிலைமை இப்படியிருக்க கொழும்பு தொலைக்காட்சி ஒன்றின் நிகழ்ச்சியில் பங்குபற்றிய சுமந்திரன், கடந்த வார ஐவர் கூட்டத்தில் சஜித்தை ஆதரிப்பதை சிறீதரன் எம்.பியும் ஏற்றுக் கொண்டதாக இன்னொரு பொய்யைக் கூறினார். இதனை உடனடியாகவே சிறீதரனும் மாவை சேனாதிராஜாவும் மறுத்துள்ளனர்.

2005 ஜனாதிபதித் தேர்தலை பகிஷ்கரிப்பதென எடுத்த முடிவினூடாக ரணில் விக்கிரமசிங்கவை தோற்கடித்தவர்கள் விடுதலைப் புலிகள். சஜித்

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# கொழும்பில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழி: கடற்படை முகாம் இருந்த இடத்தில் இருப்பதால் பல கேள்விகள் எழுகின்றனவாம்!

**ரஞ்சன் அருண் பிரசாத்**



இலங்கையில் பல பத்தாண்டுகளாக அவ்வப்போது மனிதப் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்படுவது தொடரும் நிலையில், தற்போது தலைநகரத்தின் முக்கிய வளாகம் ஒன்றிலும் மனிதப் புதைகுழியொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கொழும்பின் பிரதான பகுதியும், அதிவுயர் பாதுகாப்பு வளையமுமான பகுதி ஒன்றிலிருந்தே இந்த மனிதப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு துறைமுகத்திற்குள் செல்லும் இங்குறுகடை சந்தியிலிருந்து நிர்மாணிக்கப்படும் வீதி அபிவிருத்தி பணிகளுக்காக இடம்பெற்ற அகழ்வு நடவடிக்கைகளின் போதே இந்த மனிதப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு துறைமுகப் பகுதியிலுள்ள பழைய மாவட்டச் செயலக வளாகத்தில் கடந்த ஜூலை மாதம் 13ஆம் தேதி இடம்பெற்ற அகழ்வுப் பணிகளின் போதே இந்த மனிதப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து, இந்த விடயம் தொடர்பில் கொழும்பு புதுக்கடை பிரதம நீதவான் நீதிமன்றத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டதை அடுத்து, பிரதம நீதவான் பண்டார இலங்கசிங்க முன்னிலையில் கடந்த 5ஆம் தேதி அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

இலங்கையில் கடந்த காலங்களில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழி தொடர்பான ஆய்வுகளை நடத்திய தொல்பொருள் பேராசிரியர் ராஜ் சோமதேவவினால் இந்த மனிதப் புதைகுழியின் அகழ்வுப் பணிகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

**மனிதப் புதைகுழி எந்த காலப் பகுதிக்குச் சொந்தமானது?**

இந்த மனிதப் புதைகுழி எந்த காலப் பகுதிக்குச் சொந்தமானது என்பது தொடர்பில் இதுவரை சரியாக அனுமானிக்க முடியவில்லை என பேராசிரியர் ராஜ் சோமதேவ தெரிவிக்கிறார்.

"இங்குள்ள குழப்பகரமான நிலைமையால், இந்த இடம் மிகவும் சிக்கலான பகுதியாக உள்ளது. இங்கு வீதிகள் இரண்டு முறை அமைக்கப்பட்டுள்ளன. கால்வாய்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. அபிவிருத்திப் பணிகள் இடம்பெற்ற பகுதியாகவும் இது இருக்கிறது. அதனால், இந்த விவகாரம் மிகவும் சிக்கலான ஒன்றாகியுள்ளது," என்று அவர் தெரிவித்தார்.

"காலப் பகுதி தொடர்பில் ஏதேனும் தடயங்கள் கிடைக்கும் வரை, காலப் பகுதி குறித்து எதையும் எம்மால் கூற முடியாது. நாங்கள் இன்னும் எலும்புக் கூடுகளை முழுமையாகக் காணக்கூடிய அளவிற்குக்கூட வரவில்லை.

மேல் பகுதியை மாத்திரமே அகழ்ந்து கொண்டிருக்கின்றோம். எலும்புக் கூடுகளை முழுமையாக எடுப்பதற்கு இன்னும் ஒரிரு தினங்கள் எடுக்கும்," என அகழ்வுப் பணிகளை மேற்கொள்ளும் பேராசிரியர் ராஜ் சோமதேவ தெரிவிக்கிறார்.

**காணாமல் ஆக்கப்பட்டுள்ளோர் புதைந்துள்ளனரா?**

இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களை இந்தப் புதைகுழியில் புதைத்திருக்கலாம் என்ற சந்தேகத்தை அடுத்து, காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளும் இந்த மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகளில் தலையீடு செய்துள்ளனர்.

"இந்த இடத்தில் கடற்படை முகாமொன்று இருந்தது. துறைமுக போலீஸ் என்பது 1988 மற்றும் 1989ஆம் ஆண்டு காலப் பகுதி மற்றும் போர் இடம்பெற்ற காலப் பகுதியில் சந்தேக நபர்களைத் தடுத்து வைக்கும் ஒரு இடமாகப் பிரபல்யமடைந்து காணப்பட்டது.

இதனாலேயே, இந்த மனிதப் புதைக்குழி 1988 மற்றும் 1989ஆம் ஆண்டு காலப் பகுதிக்குச் சொந்தமானதாக இருக்கலாம் என நாங்கள் சந்தேகிக்கிறோம்" என்று காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்கள் ஒன்றியத்தின் தலைவர் பிரிட்டோ பெர்ணான்டோ தெரிவிக்கின்றார்.

அரசாங்கத்திற்கு உண்மையைக் கண்டறியும் அரசியல் தேவை இல்லாமை காரணமாகவே, கடந்த காலங்களில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழிகள் தொடர்பான எதிர்கால விசாரணைகள் நடத்தப்படவில்லை என அவர் குற்றம் சாட்டுகிறார்.

அரசாங்கத்திற்கு எதிராக வன்முறைகள் அல்லது எதிர்ப்புகள் எழும் பட்சத்தில், அதைத் தடுத்து நிறுத்துவதற்கான சிறந்த அடக்குமுறையாக இந்தக் காணாமல் ஆக்குதலைப் பயன்படுத்த முடியும் என அவர் கூறுகிறார்.

இலங்கையில் இதுவரை 22 மனிதப் புதைகுழிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்கள் ஒன்றியம் தெரிவிக்கின்றது.

**"கார்பன் ஆய்வுகள் தொடர்பில் நம்பிக்கை இல்லை"**

இலங்கையில் இதற்கு முன்னர் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழிகளில் இருந்து கண்டெடுக்கப்பட்ட மனித எச்சங்கள் தொடர்பில் நடத்தப்பட்ட கார்பன் ஆய்வுகள் குறித்து நம்பிக்கை இல்லை என காணாமல் போனோர் குடும்பங்கள் ஒன்றியத்தின் தலைவர் குறிப்பிடுகின்றார்.


"குறிப்பாக அண்மைக் காலத்தில் கார்பன் ஆய்வுகளுக்காக அனுப்பப்பட்ட மனித எச்சங்கள் சரியாக ஆய்வு நடத்தப்பட்டது என நம்ப முடியவில்லை. அரசாங்கத்தின் தேவைகளுக்கு அமைய தீர்மானங்களை மாற்ற முடியும் என்ற நம்பிக்கையே எமக்குள்ளது" என அவர் கூறுகின்றார்.

"இந்த மனித எச்சங்களிலுள்ள டி.என்.ஏவுடன், ஒப்பிட்டுப் பார்க்கும் வகையிலான உறவினர்களின் டி.என்.ஏ வங்கியொன்று கிடையாது. அதனால், இந்த மனித எச்சங்கள் யாருடையது என்பதை அடையாளம் காணும் வகையிலான உபாயங்கள் இல்லை.
அத்துடன், அரசாங்கம் இந்த விடயம் தொடர்பில் ஊக்கமளிப்பதில்லை. அந்தந்த குடும்பங்களின் உறவினர்கள் மற்றும் சிவில் அமைப்புகள் தலையீடு செய்வதற்கான ஊக்குவிப்பு இல்லை. அதனால், இந்த விடயம் வெற்றியளிக்கவில்லை," என அவர் குறிப்பிடுகின்றார்.

இலங்கையில் கடந்த 30 ஆண்டு காலத்தில் மாத்திரம் சுமார் 20க்கும் அதிகமான மனிதப் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

நான்கு சிவில் அமைப்புகள் ஒன்றிணைந்து அண்மையில் வெளியிட்ட அறிக்கையொன்றின் பிரகாரம், 20 மனிதப் புதைகுழிகள் இதுவரை நாட்டில் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இந்த அறிக்கை வெளியிடப்பட்டதை அடுத்து, முல்லைத்தீவு கொக்குத் தொடுவாய் மனிதப் புதைகுழி மற்றும் கொழும்பு துறைமுக மனிதப் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.



இலங்கையில் அடையாளம் காணப்பட்டுள்ள அனைத்து மனிதப் புதைகுழிகள் தொடர்பிலும் தாம் கவனம் செலுத்தியுள்ளதாக மனிதப் புதைகுழிகள் தொடர்பான வழக்குகளில் முன்னிலையாகும் வழக்கறிஞர்கள் தெரிவிக்கின்றனர்.

இதன்படி, கொழும்பு துறைமுக மனிதப் புதைகுழி தொடர்பிலும் தாம் கவனம் செலுத்தியுள்ளதாக வழக்கறிஞர் கே.வி.நிறஞ்சன் தெரிவிக்கின்றார்.

"கொழும்பு துறைமுக மனிதப் புதைகுழிக்கு முன்னதாக கண்டுபிடிக்கப்பட்ட கொக்குத்தொடுவாய் மனிதப் புதைக்குழி தொடர்பான அகழ்வுப் பணிகள் நிறைவடைந்துள்ளன. இந்த மனிதப் புதைக்குழியிலிருந்து எடுக்கப்பட்ட எலும்புப் கூடுகள் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அது தொடர்பான அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது" என அவர் குறிப்பிடுகிறார்.

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி தொடர்பான இடைக்கால அறிக்கையை, தொல்லியல் துறை சிரேஷ்ட பேராசிரியர் ராஜ் சோமதேவ முல்லைத்தீவு நீதிமன்றத்தில் சில மாதங்களுக்கு முன்னர் சமர்ப்பித்திருந்தார்.





இந்த இடைக்கால அறிக்கையின் பிரகாரம், குறித்த மனிதப் புதைகுழி 1994ஆம் ஆண்டுக்கு முற்படாததும், 1996ஆம் ஆண்டுக்கு பிற்படாதது மான காலப்பகுதியைக் கொண்டிருக்கலாம் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையிலேயே கொழும்பிலும் தற்போது மனிதப் புதைகுழியொன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. •

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தமிழ் மக்களுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகத்தின் திறந்த மடல் !

# தமிழின எழுச்சியின் தடைகள் உடைத்து தமிழர் தேசமாய் அணி திரள்வோம்!

நூற்றாண்டுகள் கடந்த கட்டமைக்கப்பட்ட இனவழிப்புப் பொறிமுறைகளிற்குள் (Structural Genocide) சிக்குண்டு இனவிடுதலை வேண்டி நிற்கும் ஈழத்தமிழ் மக்கள் எங்களின் அரசியல் விடுதலைப் பயணத்தில் தவிர்க்க முடியாதவொரு தேர்தலாக எதிர்வரும் செப்டெம்பர் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள சிறிலங்காவின் அரச தலைவரைத் தேர்வு செய்யும் தேர்தல் மாறியுள்ளது. இந்த நிலையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகமாக இம்மடலினை எங்கள் பேரன்புமிக்க தமிழ் மக்களை நோக்கி மாணவர்கள் நாங்கள் எழுதுகின்றோம்.

**தமிழ் மக்கள் உதிரிகளாக்கப்படுதலும் கூட்டு மனவலு சிதைக்கப்படுதலும்**

2009 இற்குப் பின்னரான 15 ஆண்டுகள் காலத்தில் தமிழ் மக்கள் தேசமாகச் சிந்திப்பதிலிருந்தும், எழுச்சியடைவதிலிருந்தும் எங்களை விலகியிருக்கச் செய்வதில் சிங்கள - பௌத்த பேரினவாதம் ஏறக்குறைய வெற்றியடைந்திருக்கின்றது. சாதிகளாக, மதங்களாக, பிரதேசங்களாக தமிழ் மக்களையும் தமிழ்த் தேசிய அரசியற் கட்சிகளையும் உதிரிகளாக்கி, எங்களின் கூட்டு மனவலுவைத் தகர்த்தெறிந்து உளவியல் ரீதியில் தோல்வி மற்றும் அடிமைத்துவ மனோநிலையினை எங்கள் மக்களிடையே விதைப்பதனை சிறிலங்கா அரசின் முகவர்களும் அவர்களது அமைப்புக்களும் கனகச்சிதமாகச் செய்து முடித்துள்ளன.

தமிழ் மக்களினது அரசியற் பலத்தினையும் எழுச்சியினையும் இல்லாதொழிப்பதற்காகச் சாணக்கியம், ராஜதந்திரம் என்று பெயரிட்டு தமிழ்த் தரப்புகளால் முன்னெடுக்கப்பட்ட வெற்றுக் காசோலை அரசியல் பயன்படுத்தப்பட்டது. அதன் விளைவே கடந்த 2010, 2015, 2019 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற சிறிலங்காவின் அரச தலைவர் தேர்தல்களில் தமிழ் இனப்படுகொலை பொறுப்பாளிகளான ஒரு தரப்பினரை எதிர்ப்பதாகக் கூறி, இனப்படுகொலைக் குற்றத்தைப் புரிந்த சிறிலங்காவின் இராணுவத் தளபதி, பதில் பாதுகாப்பு அமைச்சர், போர்க்குற்றம் புரிந்த பெருமளவான இராணுவத்தினரின் ஆதரவினைப் பெற்ற நபர்களுக்கு வாக்களித்தோம். பரிகார நீதியைக் கோர வேண்டிய நாம், எமது அரசியற் தலைமைகளினால் கண்மூடித்தனமாக வழிநடத்தப்பட்டோம்.

**எம்மைச் சூழும் பொருளாதார நல்லிணக்க மாயைகள்!**

சிறிலங்காவின் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள வங்குரோத்து நிலையைக் காரணங்காட்டி கவர்ச்சிகர வாக்குறுதிகளை முன்வைத்து வரும் சிங்கள - பௌத்த பேரினவாதத்தின் முகவர்கள் நாட்டின் இந்நிலைக்குத் தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறைகளும், வலிந்து திணிக்கப்பட்ட போருமே அடிப்படைக் காரணம் என்பதை ஏற்றுக் கொள்வதாகத் தெரியவில்லை.

அடிப்படையில் இந்த நாட்டினுடைய பொருளாதாரத்தினை மேம்படுத்துவதற்கு அரசியல் உறுதித் தன்மை அவசியமாக உள்ள நிலையில், தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் ஆக்கிரமிப்புக்கள், ஒடுக்குமுறைகளை நிறுத்தும் சித்தம் ஏதுமின்றி, தமிழ் மக்களின் உரிமைக்கான குரல்களை இனிப்புத் தடவிய வார்த்தை ஜாலங்களினால் அறுத்தெறியும் பணிகளிலேயே நாட்டமும் மும்முரமும் காட்டுகின்றனர். தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்ட ஒற்றையாட்சி அரசியலமைப்பையோ அல்லது பௌத்தத்திற்கு முதன்மை வழங்கும் அதன் கட்டமைப்பையோ இவர்கள் எவரும் கேள்விக்குள்ளாக்காமல் நல்லிணக்கம் பேசுவதென்பது அற்ப வாக்குகளிற்காகவேயன்றி வேறெதற்காக?

**தமிழர் தேசமாய்த் திரள்வோம் !**

தொடர்ந்தும் தமிழர் நிலம் ஆக்கிரமிக்கப்பட்டு வரும் நிலையில், அதனை எதிர்கொள்வதற்கேற்ற பலமானதொரு திரளாக அரசியல் மற்றும் கட்டமைப்பு ரீதியாகத் தமிழ் மக்கள் நாங்கள் எழ முடியாது உதிரிகளாக்கப்பட்டு, கூட்டு மனவலு சிதைக்கப்பட்டுள்ளது. இக்கையறு நிலையாவது கடந்த கால அனுபவங்களைப் பரிசீலனை செய்து, சுதாகரித்து முன்னகர வேண்டிய கட்டாய நிலையில் உள்ளோம்.

அதிகாரப்பகிர்வோடு எவ்விதத்திலும் தொடர்பற்ற ஒற்றையாட்சி, அரசியலமைப்பின் 13ஆம் திருத்தச் சட்டத்தினுள் தமிழரின் அரசியலை சுருக்கியது என்பது சிங்கள - பௌத்த பேரினவாதத்தின் ராஜதந்திரத்திற்கு கிடைத்த வெற்றி என்பதோடு, தமிழ் மக்களிற்கான அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வை மேற்கொள்ளவல்ல திடசித்தமுள்ள தலைவர் ஒருவரையேனும் சிங்கள மக்கள் மத்தியில் காண முடியவில்லை என்பதும் நோக்கத்தக்கது.

தமிழ்த் தேசியம் பேசுகின்ற கட்சிகளில் பயணிப்போர்கள் அனைவரும் தமிழினத்தின் விடுதலைக்கு, மேன்மைக்கு உழைப்பவர்கள் என்று நம்பி ஏமாந்த எங்களுக்கு, புலித்தோல் போர்த்திய நரிகளின் ஊளையிடுதல்களையும் கூச்சல்களையும் உதறித்தள்ளி, தமிழர் தேசமாக, எங்கள் தலைவிதியை நாங்களே மாற்றி எழுதும் பெருவாய்ப்பு இனப்படுகொலை நிகழ்ந்து 15 ஆண்டுகளின் பின் கனிந்துள்ளது.

> “தமிழ் மக்களைத் தேசமாய் அணி திரட்டுவதற்கும், பன்னாட்டுச் சமூகங்களிற்கு விடுதலைக்கான எங்களின் கூட்டு வேட்கையினையும், கூட்டு மனோபலத்தினையும் வெளிப்படுத்துவதற்கும் எங்களிற்குள்ள ஒரேயொரு வாய்ப்பாகத் தமிழ்ப் பொதுவேட்பாளர் எண்ணக்கருவினை நாங்கள் பலப்படுத்த வேண்டும்.”

**தமிழரை அணிதிரட்டி வெல்லட்டும் தமிழ்ப் பொதுவேட்பாளர் !**

தமிழ் மக்களைத் தேசமாய் அணி திரட்டுவதற்கும், பன்னாட்டுச் சமூகங்களிற்கு விடுதலைக்கான எங்களின் கூட்டு வேட்கையினையும், கூட்டு மனோ பலத்தினையும் வெளிப்படுத்துவதற்கும் எங்களிற்குள்ள ஒரேயொரு வாய்ப்பாகத் தமிழ்ப் பொதுவேட்பாளர் எண்ணக்கருவினை நாங்கள் பலப்படுத்த வேண்டும். இது ஒரு காத்திரமான வழிமுறை. இது எமது வரலாற்றுக் கடமை. தமிழ்ப் பொதுவேட்பாளர் சிறிலங்காவின் அரச தலைவர் இருக்கையை வெல்லப் போகின்றவரல்ல் மாறாக தமிழ் மக்களை அணிதிரட்டுவதில் வெல்லப் போகின்றவர்.

இனியாவது ஏமாற்றும் கபட அரசியலிற்குப் பலியாகாமல், தமிழ் மக்களின் வாக்குகள் சிங்கள - பௌத்த பேரினவாதத்தின் முகவர்களுக்கோ, வெளித் தரப்புக்களுக்கோ சென்று சேர்வதைத் தவிர்த்து, தமிழ் மக்களின் அரசியல் வேணவாக்களைப் பிரதிபலிக்கும் தீர்மானங்களைத் தமிழ் மக்கள் கூட்டாக மேற்கொள்ள வேண்டும். தவறுவோமேயானால் நாங்கள் அரசியல் பிழைத்த மக்களாக்கப்படுவோம்.

நாங்கள் மாறி மாறி சிங்கள ஆட்சியாளர்களுக்கு வாக்களிக்க வழிநடத்தப்பட்டோம். இதனால் தமிழ் மக்களின் நிலை, அரசியல், சமூக ரீதியில் பரிதாபகரமாய்ப் போனதேயன்றி வேறேதும் நிகழவில்லை. உரிமைகளுற்கான தமிழரின் அரசியல் இன்று சலுகைகளுக்காகத் துவண்டு போயுள்ளது. இந்தச் சூழ்நிலையில் தமிழ்ப் பொதுவேட்பாளராகக் களமிறங்கியுள்ள திரு.பா.அரியநேத்திரன் அவர்களுக்கு, அவரின் சங்குச் சின்னத்திற்கு வாக்களிப்போம். மாற்றுக் கருத்துக்கள் இருப்பினும், கட்சி வேறுபாடுகள் கடந்து வடக்கு - கிழக்கு, மலையகம், இதர பகுதிகளில் வாழும் தமிழ் மக்கள் அனைவரும், சங்கு சின்னத்திற்கு வாக்களித்து எங்கள் திரட்சியை, இத் தேர்தலில் வெளிப்படுத்துவோம்.

எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்!
இங்குள்ள தமிழர் ஒன்றாதல் கண்டே!!

**- யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகம்**

# நம்பிக்கைக்குரிய ஜனாதிபதிகள்?

தேர்தல் அறிக்கைகளை நம்பினால் எதிலும் நம்பிக்கை வரும் என்கிறார்கள். இன்னும் எதார்த்தமாக, இலங்கையின் ஒரு காலத்தில் ‘வடக்கு நட்சத்திரம்’, மறைந்த சிங்கப்பூர் பிரதமர் லீ குவான் யூ, இலங்கையில் தேர்தல் வாக்குறுதிகளை ‘இல்லாத வளங்களை ஏலம் விடுவது’ என்று பிரபலமாகக் கூறினார். அதனால், பாரம்பரியம் தொடர்கிறது.

நாட்டின் உயர் பதவிக்கான போட்டியாளர்கள், சந்தேகத்திற்கு இடமின்றி, நல்ல நோக்கத்துடன், அந்தந்த அணிகளை நள்ளிரவில் எண்ணெயை எரித்து, இந்த நாட்டு மக்களுக்காக தங்கள் “விரும்பப் பட்டியலை” ஒன்றாக இணைத்துள்ளனர். தேர்தலுக்குப் பிறகு இந்த ‘விஞ்ஞாபனங்களை’ இரண்டாவதாகப் பார்க்க வேண்டும் என்று எத்தனை பேர் இதயத்தில் கை வைத்துச் சொல்ல முடியும்?

தொழில்மயமான மேற்கின் பல நாடுகளில் போலல்லாமல், அனைத்து சமூக-பொருளாதார-அரசியல் கோட்பாடுகளும் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. நவ-தாராளமயம் முதல் சமூக ஜனநாயகம் வரை, மார்க்ஸ், மாவோ அல்லது மக்காவோ என்று யாருக்கும் தெரியாத கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையும் உள்ளது. அவர்கள் இயற்கையில் மிகவும் கற்பனாவாதமாக இருக்கிறார்கள், மிகப் பெரியவர்களாகவும், நம்பத்தகாதவர்களாகவும் இருக்கிறார்கள், வாக்காளர்கள் அவற்றை பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை.

தெரியாதவற்றின் அடிப்படையில் வருவாயை எவ்வாறு சேகரிப்பது என்பது பற்றிய எந்தத் துப்பும் இல்லாமல் பொய்யான நிதி வாக்குறுதிகள் மற்றும் ஊதாரித்தனமான சலுகைகளை வழங்குவதை அரசியல் கட்சிகள் நிறுத்த வேண்டும் என்று வணிகர் சங்கம் கேட்டுக்கொள்கிறது. இந்த வேண்டுகோள்கள் காதில் விழுகின்றன. கொக்கி அல்லது கான் மூலம் வெற்றி பெற வேண்டிய தேர்தல் உள்ளது.

உள்நாட்டுப் பிரச்னைகளில், வாக்குறுதிகள் ஏராளம்: பொதுத் துறையில் லட்சக்கணக்கானோருக்கு சம்பள உயர்வு நடுத்தர வர்க்கத்தின் பரந்த வாக்கு தளத்திற்கு வரி குறைப்பு மற்றும் கல்வி மற்றும் சுகாதாரத்துடன் தொடர்புடைய எதையும். ஐஆகு உடனான பேச்சுவார்த்தைகள் அனைத்தும் தொடர்வது பற்றியது, ஆனால் “எங்கள் நிபந்தனைகளுடன்”. கடன் வாங்குபவர் கடன் கொடுத்தவருக்கு நிபந்தனைகளை ஆணையிடுவது போல.

விஞ்ஞாபனங்களில் இடம்பெற்றுள்ள 250 பக்க புனைகதைகளை வாசிக்கும் வகையல்ல இலங்கை அரசியல். அவை ஒன்றும் இல்லை என்று அவர்களுக்குத் தெரியும் - இது காகிதத்தை வீணாக்குவது மற்றும் உள்ளடக்கங்களைப் பற்றி விவாதிக்கும் நாக்கை வீணடிப்பது. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிப்பது மீண்டும் சில விஞ்ஞாபனங்களுக்குள் நுழைந்துள்ளது. 1994 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் அது ஒரு பிரமாண்டமான பிரவேசத்தை முதன்முறையாக வெளியிட்டது, மேலும் நீதி அமைச்சராக வரவிருந்தவர் அது நிகழும் தேதியை சரியாக நிர்ணயித்தார் - ஜூலை 15, 1995.

தேதி வந்ததும், அந்த தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றக் கோரியவர்கள், ஜனாதிபதியின் பாதுகாப்பில் கண்ணீர் புகைக் குண்டுகளை வீசினர். அதன்பிறகு, ஜனாதிபதி பணியில் மேலும் ஒரு வருடம் வேண்டும் என்று கோஷமிட்டதால், உச்ச நீதிமன்றத்தால் நிறுத்தப்பட்டது. அப்போதைய அமைச்சர் இன்றும் வாக்குறுதிகளை பொய்யாக்கிக் கொண்டிருக்கிறார் - இந்த நாட்களில் வேறு தளத்தில் இருந்து. இந்த அரசியல்வாதிகள் ஒரு காலத்தில் பச்சோந்திகள் அல்லது அரசியல் தவளைகள் என்று அழைக்கப்பட்டனர். இப்போது அவர்களை ‘வண்ண ஒளி’ அரசியல்வாதிகள் என்று அழைப்பதாகத் தெரிகிறது. இவை மூன்று வண்ணங்கள் மட்டுமே என்பதைத் தவிர.

எவ்வளவு விஷயங்கள் வெளித்தோற்றத்தில் மாறுகிறதோ, அவ்வளவு அதிகமாக அவை அப்படியே இருக்கும். (சண்டே ரைம்ஸ் ஆசிரியத் தலையங்கத்திலிருந்து)

**தமிழில் : குணாளன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ஆக்குவாய் காப்பாய்' கனடியத் தமிழ்த் திரைப்படம்

குரு அரவிந்தன்




தமிழர்கள் புலம் பெயர்ந்த நாடுகளில் ஒன்றான கனடாவில் தயாரிக்கப் பட்ட 'ஆக்குவாய் காப்பாய்' என்ற திரைப்படம் பற்றிய ஊடகச் சந்திப்பு சென்ற ஆகஸ்ட் மாதம் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ரொறன்ரோ நகெட் அவென்யூவில் உள்ள பிறைமா நடனப் பள்ளி மண்டபத்தில் மாலை 7 மணியள வில் நடைபெற்றது. இந்தப்படம் கனடா நாட்டில் வசிக்கும் ஒரு தமிழ்ப் பெண் ணின் வாழ்க்கைப் போராட்டங்களை மையப்படுத்திய கதைக்கருவைக் கொண் டிருக்கின்றது.

லூனார் மோஸன் பிக்சர்ஸ் மற்றும் ஆர். புறொடக்ஸன்ஸ் இணைந்து தயா ரித்த இந்தப் படம் கனடா எஸ். மதிவாச னின் எழுத்து, இயக்கத்தில் உருவாகி இருக்கிறது. இந்தத் தமிழ்ப்படம் செப் ரெம்பர் மாதம் 28 ஆம் திகதி யோர்க் சினிமா திரையரங்கில் மதியம் ஒரு மணிக்குத் திரையிடப்பட இருக்கின்றது.

இதில் கதாபாத்திரங்களாக கிருந் துஜா சிறிகாந், ஜெயப்பிரகாஸ், டேனிஸ் ராஜ், செந்தில் மகாலிங்கம், மதிவாசன் சீனிவாசகம், சுரபி யோகநாதன், ஆஸ்லி சுரேஸ்குமார், ஆதியா தயாளன், தனிஸா, சுதர்ஸி இக்னேஸியஸ், ரிஸீத் தலீம், மார்க் டிபேக்கர், டாக்டர் கரு கந்தையா, டாக்டர் கதிர் துரைசிங்கம், டாக்டர் வரகுணன் ஆகியோரும் இந்தப் படத்தில் நடிக்கின்றனர். ஜீவன் ராம்ஜெயம் மற்றும் தீபன் ராஜலிங்கம் ஆகியோர் ஒளிப்திவு செய்திருக்கிறார்கள். ரியூ ஆர். கிருஸ்ணா இந்தப் படத்திற்கு இசை அமைத்திருக்கின்றார். மகாஜனா கல்லூ ரியின் பிரபல நாடக நடிகரும், வைத்திய கலாநிதியுமான கதிர் துரைசிங்கம் இந்தப் படத்தில் வைத்தியராகக் கௌர வப் பாத்திரம் ஏற்று நடித்திருக்கின் றார்.

இதன் மூலக்கதையைச் எழுத்தாளரும் நடிகருமான சகாப்தன் எழுதியிருக்கின் றார். இந்தக் கதையை அடிப்படையாகக் கொண்டு வெளிவந்த 'ஆக்குவாய் காப் பாய்' என்ற நாடகம் மனவெளி கலை யாற்றுக் குழுவினால் அரங்காடல் நிகழ்ச்சியில் ரொறன்ரோவில் இரண்டு காட்சிகளும், கனடா, மகாஜனக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினரால் ரொறன்ரோவிலும், மொன்றியலிலும், லண்டன் மகாஜனக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினால் லண்டனில் ஒரு தடவையும் மேடையேற்றப்பட்டன.

மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் நாகமுத்து சாந்திநாதனின் நெறியாள் கையில், நாடகத்தில் சுமுதினி சக்திவடி வேல், தயாபரன் ஆறுமுகம், டாக்டர் கதிர் துரைசிங்கம், சகிலா தவராஜா ஆகியோர் நடித்திருந்தனர். புலம் பெயர்ந்த மண்ணில் கனடியத் தமிழர்கள் நாடகக்கலையைத் தொடர்ந்தும் தக்கவைத்திருப்பது பெருமைக்கும், பாராட்டுக்கும் உரியது.

கனடாவில் எனது 'முள்ளுவேலி' என்ற சிறுகதையை வேலி என்ற பெயரில் மதிவாசன் தயாரித்து, நெறியாள்கை செய்த போது சிறந்த ஈழத்து நடிகரான அமரர் கே. எஸ். பாலச்சந்திரன் அதில் நடித்திருந்தார். திரைக்கதை வசனத்தை நான் எழுதியிருந்தேன். இதைத் தொடர்ந்து 'சுகம் சுகமே,' 'சிவரஞ்சனி' போன்ற இந்திய - கனடா கூட்டுத் தயா ரிப்பான படங்களுக்கும் திரைக்கதை வசனம் எழுத சந்தர்ப்பம் கிடைத்திருந் தது. தமிழ்ப்படங்களைத் தயாரிப்பதில் இந்தியாவுக்கு அடுத்ததாக இரண்டா வது இடத்தில் கனடா நாடு இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

---

# வியுக்தியார் பதில்கள்



உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி

வியுக்தியார் பதில்கள்
ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
viyukthiyar@gmail.com

**எம். அகிலேஸ்வரன்**
**சித்தன்கேணி.**

**கேள்வி:** ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸ வை ஆதரிப்பது தொடர்பான இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தீர்மானத்தில் எவ்வித மாற்றமும் இல்லை என்று இலங்கை தமிழ் அரசு கட்சியின் பதில் பொதுச் செயலாளர் ப. சத்தியலிங்கம் அறிவித்துள்ளாரே. அவர்களின் அந்த முடிவில் மாற்றம் இருப்பதாக யாரும் அறிவித்ததாக நாம் அறியவில்லையே. அப்படியெனில் எதற்காக அவர் மாற்றம் இல்லை என்கிறார்?

**வியுக்தியார்:** ஐந்து பேர் கலந்துகொண்ட கூட்டம் ஒன்று அண்மையில் அவர் இல்லத்தில்தான் நடந்தது. அந்தக் கூட்டத்தில் இருந்து வெளியேவந்த ஒவ்வொருவரும் அங்கு நடந்த கூட்டம் பற்றி ஒவ்வொரு விதமாக ஊடகங்களுக்கு கூறியபோதே அவர்கள் கட்சிக்குள் இருக்கும் 'சங்கதிகள்" வெளிவந்துவிட்டனவே. தமிழரசு கட்சியில் என்ன முடிவெடுத்தாலும் அதனை அவர்கள் அடிக்கடி மாற்றிக்கொள்வார்கள் அல்லது யாரேனும் நீதிமன்றுக்குப் போய் மாற்றிவிடுவார்கள் என்பதால் தங்கள் முடிவை இப்படித்தான் அடிக்கடி அவர்கள் ஞாபகப்படுத்துகின்றார்களோ தெரியவில்லையே.

---

**எம். கௌதம்,**
**அமிர்தகழி, மட்டக்களப்பு**

**கேள்வி:** 'சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கும் முடிவை நான் ஏற்றேன் என்று சுமந்திரன் கூறுவது முற்றிலும் பொய். தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிக்கும் நிலைப்பாட்டிலிருந்து நான் பின்வாங்கப்போவ தில்லை", என்று தமிழ் அரசு கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட எம்.பி. சி.சிறிதரன் கூறியிருக்கிறாரே. சுமந்திரன் அப்படி பொய் சொல்லுவார் என்று நீங்கள் நம்புகின்றீர்களா?

**வியுக்தியார்:** சுமந்திரன் ஒரு கிறிஸ்தவர். ஒவ்வொரு கிறிஸ்தவர்களும் யேசுவின் பத்துக்கட்டளைகளை ஏற்று நடப்பவர்கள். யேசு தனது பத்துக்கட்டளைகளில் பொய் சாட்சி சொல்லவேண்டாம் என்றுதான் கட் டளை இட்டிருக்கிறாரே தவிர, பொய் சொல்லக்கூடாது என்று சொன்னதாக தெரியவில்லை. தமிழ் அரசு கட்சியின் மத்திய செயற்குழு ஏற்கனவே சஜித்தை ஆதரிக்கும் முடிவை எடுத்துவிட்டது. அந்த முடிவை சிறிதரன் ஏற்றுக்கொள்ளவில்லை என்றால், அல்லது அந்த முடிவுக்கு விரோதமாக நடந்துகொண்டால் சட்டப்படி கட்சி அவர் மீது நடவடிக்கை எடுக்கலாம். ஆனால், சுமந்திரனும் கட்சி முடிவெடுக்க முன்னரே தான் பொதுவேட்பாளருக்கு எதிராக பிரச்சாரம் செய்வேன் என்று சொன்னவர் என்பதால், சிறிதரன் கட்சி முடிவுக்கு மாறாக பொதுவேட்பாளரை ஆதரித்தாலும் அவர் கண்டுகொள்ள மாட்டார் என்றே நம்பலாம். அவர் கண்டுகொள்வார் என்றால்தான், இன்னுமொரு வழக்கு வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லையே.

---

**சபா. சிவநாதன்,**
**குரும்பசிட்டி, தெல்லிப்பழை.**

**கேள்வி:** தமிழ் மக்கள் பிரதிநிதிகளில் பெரும்பான் மையானோரின் ஆதரவு ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசாவுக்கே உள்ள தாக, நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளாரே.

**வியுக்தியார்:** அவர் சொல்வதில் என்ன சந்தேகம் உங்களுக்கு?. அவர் தமிழ் மக்கள் பிரதிநிதிகளின் ஆதரவுதானே இருப்பதாக சொல்கிறார். தமிழ் மக்களின் ஆதரவு இருப்பதாக சொல்லவில்லையே. தமிழ் மக்கள் எப்போது தமது பிரதிநிதிகள் சொல்வதைக் கேட்டு ஜனாதிபதி தேர்தலில் வாக்களித்திருக்கிறார்கள். அவருக்கு எங்கே நமது உள்வீட்டு சமாச்சாரங்கள் தெரி யப்போகின்றது.

---

**கந்தையா முகுந்தன்**
**சுவாமியார் வீதி, கொழும்புத்துறை.**

**கேள்வி:** அரசியல் தீர்வை முன்னிலைப்படுத்தாத வேட்பாளர்களாகவே தென் னிலங்கை வேட்பாளர்கள் செயல்பட்டு வருகின்றனர் என்று தமிழ்ப்பொது வேட் பாளர் பா.அரியநேத்திரன் தெரிவித்துள்ளாரே.

**வியுக்தியார்:** அவர்களுக்கும் 'அந்த விடயம்" தெரிந்து விட்டதுபோலும். தமிழ் மக்கள் உண்மையில் அரசியல் தீர்வுக்காகவே வாக்களிக்கிறார்கள் என்றால், அறுபது எழுபது வருடங்களாக ஒரே ஆட்களுக்கு வாக்களித்துக்கொண்டு இருப்பார்களா? அவர்களும் ஒவ்வொரு தேர்தலிலும் ஒற்றுமையாக எங்களுக்கு வாக்களியுங்கள் அப்போதுதான் தீர்வு கிடைக்கும் சர்வதேசம் திரும்பிப்பார்க்கும் என்று சொல்லிக் கொண்டுதான் இருக்கிறார்கள். நாமும் அவர்களுக்கே வாக்களித்துக்கொண்டு இருக்கிறோம் என்றால் நமக்கு தீர்வு தேவையா என்பதிலும் ஒரு சந்தேகம் இருக்கிறது [illegible] வேட்பாளர்களுக்கும் அது புரிந்துவிட்டது என்று நினைக்கின்றேன்.

---

**இரா. ஜெயருபன்,**
**பூந்தோட்டம், வவுனியா.**

**கேள்வி:** மலையக, முஸ்லிம் மக்கள் விருப்பு வாக்கு களில் ஒன்றை தமிழ்ப் பொது வேட்பாளர் அரியநேத்திர னின் சின்னமான சங்கு சின்னத்துக்கு அளிக்க வேண்டும் என்று தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் க. வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளாரே. அவரது கோரிக்கையை மலையக மற்றும் முஸ்லிம் மக்கள் கருத்தில் எடுப்பார்கள் என்று நினைக்கின்றீர்களா?.

**வியுக்தியார்:** மலையக மற்றும் முஸ்லிம் மக்களை அவர் எப்படி நினைக்கின்றார் என்பது தெரியவில்லை. அந்த மக்கள் அவ்வளவு முட்டாள்களாக இருப்பார்கள் என்று நான் நினைக்கவில்லை. தேர்தலில் எப்படி வாக்கு கள் எண்ணப்படும் என்பது கூட ஒரு எம்.பி.க்கு தெரியாதா அல்லது தெரிந்துகொண்டே எதையாவது சொல்ல வேண்டும் என்பதற்காக சொல்கிறாரா என்று தெரியவில்லை. விருப்பு வாக்குகள் எண்ணப்படுவதே இரண்டாவது தேவைக்கு தான்.

முதல் இரண்டு இடங்களை பெறும் இரண்டு வேட்பாளர்களில் எவரும் ஐம்பது வீதத்தை பெறாமல் விட்டால் மாத்திரமே மற்றயை விருப்பு வாக்குகள் எண்ணப்படும். அவ்வாறு எண்ணப்படும்போது முதல் இரண்டு இடங்களில் உள்ளவர்களிற்கு அளிக்கப்பட்ட வாக்குகளைத் தவிர்த்து மற்றயவர்களின் வாக்குகளில் யாராவது தமது இரண்டாவது தெரிவாக முதல் இரண்டு இடங்களில் வந்தவர்களுக்கு வாக்களித்திருக்கி றார்களா என்று பார்த்து அவ்வாறு வாக்களித்திருந்தால் அவை அவருக்கு சேர்க்கப்படும். அரியநேத்ததிரனுக்கு யாரா வது தமது இரண்டாவது வாக்கை அளித்திருந் தால், அது கவனத்திலேயே எடுக்கப்படமாட்டாது. தமது வாக்கை அவ்வாறு அளிப்பதற்கு அவர்கள் முட் டாள்களாக அல்லவா இருக்கவேண்டும். அல்லது விக்கி னேஸ்வரன் அவர் முதல் இரண்டு இடங்களில் வந்துவிடு வார் என்று நம்புகின்றாரோ தெரியவில்லையே.

---


**எஸ். செந்துஜன்,**
**ராசவீதி, கோப்பாய்.**

**கேள்வி:** பதின்மூன்றாவது அரசியலமைப்பு திருத் தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதாக சஜித் பிரேமதாசா தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித் திருப்பதால் அவரை ஆதரிக்க முடிவு செய்திருப்பதாக தமிழர் சமூக ஜனநாயக கட்சி தெரிவித்திருக்கின்றதே. அதைத்தானே மற்றைய வேட்பாளர்களும் சொல்லி யிருக்கிறார்கள்.?

**வியுக்தியார்:** கடந்த 2019ம் ஆண்டு தேர்தலிலும் சஜித் பிரேமதாசா 13ஐ முழுமையாக அமுல்படுத்து வேன் என்று தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்தி ருந்தார். ஆனால் அந்த தேர்தலில் போட்டியிட்ட கோட்டாபய ராஜபக்சவோ தமிழர்களுக்கு பொரு ளாதார பிரச்சினைதான் இருக்கின்றது. பதின்மூன்றையே இல்லாமல் செய்யவேண்டும் என்றார். அந்த தேர்தலில் அவர்கள் கோட்டாவை ஆதரித்தது எதற்காக என்பது அவர்களுக்குத்தான் தெரியும். இப்போதும் சஜித்தை ஆதரிப்பது எதற்காக என்றும் அவர்களிடம்தான் கேட்கவேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆப்கானில் போர்க் குற்றம் இழைத்த ஆஸி. படையினரின் பதக்கங்கள் பறிப்பு !



ஆப்கானிஸ்தானில் 2005 மற்றும் 2016 க்கு இடையில் அவுஸ்திரேலிய சிறப்புப் படைகளின் தவறான நடத்தைக்கு தளபதிகளை பொறுப்பேற்க வேண்டும் என்பது மேஜர் ஜெனரல் பால் பிரேரட்டனின் தனது போர்க்குற்ற விசாரணையில் பரிந்துரைக்கப்பட்டு உள்ளது.

39 ஆப்கானியர்களின் சட்டவிரோத கொலைகளில் சுமார் 25 அவுஸ்திரேலிய சிறப்பு சேவை படைப்பிரிவு மற்றும் கமாண்டோ ரெஜிமென்ட் துருப்புக்கள் ஈடுபட்டதாக அவர் கண்டறிந்துள்ளார்.

ஆப்கானிஸ்தானில் போர்க்குற்றம் செய்ததாக குற்றம் சாட்டப்பட்ட பல முன்னாள் அவுஸ்திரேலிய ராணுவ தளபதிகளின் பதக்கங்கள் பறிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சர் ரிச்சர்ட் மார்லஸ் (Richard Marles) 11.9.24 இல் தெரிவித்துள்ளார்.

பிரெட்டன் அறிக்கைக்கு உட்பட்ட குற்றச்சாட்டுகள், இந்நாட்டு வரலாற்றில் அவுஸ்திரேலிய போர்க்குற்றங்கள் பற்றிய மிகக் கடுமையான குற்றச்சாட்டுகள் என்று மார்லஸ் பாராளுமன்றத்தில் கூறினார்.

போர்க்குற்றங்கள் நடந்ததாகக் கூறப்படும் காலக்கட்டத்தில் அவர்கள் செய்த சேவைக்காகப் பெற்ற பதக்கங்களை மீளப் பெற அந்தப் படைகளின் தளபதிகளுக்கு கோரியுள்ளார். ஆயினும் தனியுரிமை காப்பு சட்டங்களை மேற்கோள்காட்டி எத்தனை பேருக்கு அவர் கடிதம் எழுதியுள்ளார் அல்லது அவர்களின் தரவரிசையை அடையாளங்களை அவர் காட்டவில்லை.

இதேவேளை தளபதிகளின் பதக்கங்கள் அகற்றப்பட்டதை அவுஸ்திரேலிய சிறப்பு விமான சேவை சங்கத்தின் தலைவர் மார்ட்டின் ஹாமில்டன்-ஸ்மித் கடுமையாக கண்டனம் செய்தார். இது ஆப்கானிஸ்தானில் பணியாற்றிய

> ஆப்கானிஸ்தானில் போர்க்குற்றம் செய்ததாக குற்றம் சாட்டப்பட்டு ஆஸி படைகளில் பணியாற்றிய ராணுவ தளபதிகளின் பதக்கங்கள் பறிக்கப்பட்டுள்ளதாக அவுஸ்திரேலியாவின் பாதுகாப்பு அமைச்சர் ரிச்சர்ட் மார்லஸ் தெரிவித்துள்ளமைக்கு, படைத்தரப்பில் பலத்த கண்டனங்கள் எழுந்துள்ளன.

வீரர்களின் தைரியம் மற்றும் தியாகத்திற்கு துரோகம் என அவர் விபரித்துள்ளார்.

ஆப்கானில் எங்கோ ஒரு தொலைதூர கிராமத்தில் இந்த தளபதிகள் பார்க்காத மற்றும் அறியாத, அவர்களின் கண்காணிப்பில் இல்லாத ஒரு சட்டவிரோத செயல் நடந்திருக்கலாம்.
நிரூபிக்கப்படாத குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் போர்க்களத்தில் இந்த இளம் அதிகாரிகளின் தைரியமான தலைமையை அரசாங்கத்தின் முடிவு கவனிக்கவில்லை என்று ஹாமில்டன்-ஸ்மித் தனது அறிக்கையில் காட்டமாக தெரிவித்துள்ளார்.

ஆயினும் அதிகாரிகளின் தவறுகள் மட்டுமின்றி, போர்க்குற்றம் காரணமாகவே பதக்கங்கள் பறிக்கப்பட்டன என்று அமைச்சர் மார்ல்ஸ் பின்னர் விளக்கி கூறியுள்ளார்.

உண்மையில் அங்கே என்ன நடந்தது என்று தெரியும். அதைப் பற்றி அறிந்தி ருந்தோம். ஆயினும் அப்போதய அரசு உடனடியாக செயல்படவில்லை அல்லது பரிந்துரைக்கவில்லை. அதுவே பிரச்சினை என்று அமைச்சர் மார்ல்ஸ் செய்தியாளர்களிடம் கூறினார்.

2013 இல் ஆப்கானிஸ்தானில் ஆஸி துருப்புக்களுக்கு "எஸ்ஏஎஸ்" கேப்டனாக கட்டளையிட்டவரும், தற்போதய எதிர்க்கட்சி சட்டமியற்றுபவர் ஆண்ட்ரூ ஹாஸ்டி, போர்க் குற்றங்களுக்கு அவுஸ்திரேலிய அரசியல் தலைவர்களும் இராணுவ தலைமையும் பொறுப்பேற்க வேண்டும் என்றார்.

இக்குற்றச்சாட்டுகளால் அவுஸ்திரேலிய துருப்புக்கள் தார்மீக தைரியம் இழந்து ஏமாற்றமடைந்தனர் என்று நான் நம்புகிறேன். இது கான்பரா வரை அனைத்து வழிகளிலும் கண்டனங்களுடன் சென்றுள்ளது என்று ஹஸ்டி கூறினார்.




அக்காலத்தில் ஆப்கானிஸ்தானில் அவரது இராணுவ சேவைக்காக ஹஸ்டி அங்கரிக்கப் படவில்லை. அதனால் பதக்கங்கள் பறிக்கப்பட்ட அதிகாரிகளில் அவர் இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. அப்பாவிகளின் இரத்தத்தை சிந்தியதாகக் கூறப்பட்டவர்கள் மட்டுமே அதற் குப் பொறுப்பு. யாரையும் மன்னிக்கவோ அல்லது கண்டிக்கவோ நான் இதைச் சொல்லவில்லை என்றும் ஹஸ்டி கூறினார்.

2023 ஆம் ஆண்டில், முன்னாள் எஸ் ஏஎஸ் வீரர் ஆலிவர் ஷூல்ஸ் போர்க் குற்றம் சாட்டப்பட்ட இந்த வீரர்களில் முக்கியமானவர். 2012 இல் ஆப்கானில் உருஸ்கான் மாகாணத்தில் கோதுமை வயலில் ஒரு தீவிரவாதியை சுட்டுக் கொன்றதாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டது.

கடந்த ஆண்டு அவுஸ்திரேலியாவின் மிகவும் அங்கரிக்கப்பட்ட வாழும் போர் வீரர் பென் ராபர்ட்ஸ்-ஸ்மித் எஸ்ஏஎஸ் கார்போரல் ஆக இருந்தபோது நான்கு ஆப்கானியர்களை சட்டவிரோதமாக கொன்றிருக்கலாம் என்று ஒரு சிவில்

ஐங்கரன் விக்கினேஸ்வரா

நீதிமன்றம் கண்டறிந்தது. அவர் மீதும் இதுவரை போர்க்குற்ற கிரிமினல் குற்றம் சாட்டப்படவில்லை.

இதுவரையில் ஆப்கானிஸ்தானில் போர்க்குற்றத்தில் ஈடுபட்டதாக எந்த அவுஸ்திரேலிய வீரர்களும் தண்டிக்கப் படவில்லை. ஆனால் அவுஸ்திரேலிய போர்க்குற்றங்கள் பற்றிய குற்றச்சாட்டுகளை அம்பலப்படுத்திய இரகசிய தகவலை ஊடகங்களுக்கு கசியவிட்டதற்காக முன்னாள் இராணுவ வழக்கறிஞருமான டேவிட் மெக்பிரைடுக்கு மே மாதம் கிட்டத்தட்ட ஆறு ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

ஆப்கான் போர்க்குற்றங்களை வெளியிட்ட இராணுவ வழக்கறிஞரான டேவிட் மக்பிரைட்டி அங்கு இரண்டு சுற்றுப் பயணங்களைச் செய்திருந்தார். ஆப்கானிஸ்தான் குடிமக்கள் கொல்லப்பட்டனர் என்பதனை அவரே முதன் முதலில் வெளிப்படுத்தினார்.

ஆயினும் அவர் இராணுவ இரகசியங்களை திருடி வெளியிட்டார் எனவும் குற்றஞ் சாட்டப்பட்டார். இத்தகவலை அம்பலப்படுத்தியதை மக்பிரைட் கடந்த வருடம் ஏற்றுக் கொண்டிருந்தார்.

தற்போது ஆப்கானிஸ்தானில் அவுஸ்திரேலியாவின் போர்க் குற்றங்களை அம்பலப்படுத்திய சட்டத்தரணி டேவிட் மக்பிரைட்டிற்கு அவுஸ்திரேலிய நீதிமன்றம் ஐந்து வருடங்கள் 8 மாதம் சிறைத்தண்டனை விதித்துள்ளது. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த விசாரணைகளின் போது அவுஸ்திரேலிய படையினர் ஆப்கானிஸ்தானில் 38 பொதுமக்களை கொலை செய்தமை தெரியவந்தது.

இவர் எவ்வித துன்புறுத்தலை எதிர்கொண்டவர் அல்ல என்றாலும், தற்காலத்தில் சிறையில் அடைக்கப்பட்ட முதல் அவுஸ்திரேலிய விசில்ப்ளோவர் ஆவார். ஆயினும் ஜனநாயக நாட்டில் உண்மையை தெரிவிப்பது தனது தார்மீக கடமை என தான் கருதியதாக டேவிட் மக்பிரைட் தெரிவித்துள்ளார்.





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தலைமுடி உதிர்ந்து விழும் அளவுக்கு கிரீம் பூசிய அழகுக்கலை நிலையம்!

## பெண்ணுக்கு விளக்கமறியல் உரிமையாளர் தலைமறைவு

மினுவாங்கொடை, செப். 15

பெண்ணின் தலை முடி உதிர்ந்து விழும் அளவுக்கு கிரீம் வகைகளைப் பூசி பொலிஸாரிடமிருந்து தலைமறைவாகி யிருந்த அழகுக் கலை நிலையம் ஒன்றின் பணிப் பெண்ணை எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கு மாறு மினுவாங்கொடை நீதிவான் நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த நிலையில், தலைமறைவாகி யுள்ள அந்த நிலையத்தின் உரிமையாள ருக்கும் மற்றுமொரு பணிப் பெண்ணுக் கும் வெளிநாட்டுப் பயணத் தடை விதித்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மினுவாங்கொடை பிரதேசத்தைச் சேர்ந்த 22 வயதுடைய பணிப் பெண்ணே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

மினுவாங்கொடை பொரகொட வத்தை பிரதேசத்தைச் சேர்ந்த 35 வயது டைய பெண்ணொருவர் திருமண நிகழ் வொன்றுக்கு செல்வதற்காக தனது தலை முடியை அழகு படுத்த கடந்த ஓகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி அன்று மினுவாங் கொடை நகரத்தில் உள்ள அழகு கலை நிலையம் ஒன்றுக்குச் சென்றுள்ளார்.

இதன்போது, குறித்த அழகுக் கலை நிலையத்தின் பணிப்பெண்கள் இந்த பெண்ணின் தலைமுடியில் கிரீம் வகைகளை பூசியுள்ளனர்.

இதன்போது, இந்தப் பெண்ணின் தலை முடிகள் திடீரென உதிர்ந்து விழுந்தன.

இதனையடுத்து, பாதிக்கப்பட்ட பெண் இது தொடர்பில் மினுவாங் கொடை பொலிஸ் நிலையத்தின் சிறுவர் மற்றும் மகளிர் பணியகத்தில் முறைப் பாடு செய்துள்ளார்.

சந்தேக நபர்களைக் கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்த மினு வாங்கொடை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்த நிலையில் அந்த நிலையத்தின் உரிமையாளரும் இரண்டு பணிப்பெண் களும் பிரதேசத்தை விட்டு தப்பிச் சென்று தலைமறைவாகியிருந்த நிலை யில், ஒரு பணிப்பெண் கைது செய்யப் பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள் ளார். (எ)

## யுக்தியவில் 710 பேர் சிக்கினர்

கொழும்பு, செப். 15

நாடளாவிய ரீதியில் கடந்த 24 மணித்தியாலத்துக்குள் மேற்கொள்ளப் பட்ட யுக்திய நடவடிக்கையின்போது போதைப்பொருள் குற்றம் தொடர்பில் 710 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு, கைது செய்யப்பட்டவர் களில் 697 ஆண்களும் 13 பெண்களும் அடங்குவதாக பொலிஸார் கூறினர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்க ளில் 13 பேர் பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளதுடன், போதைப் பொருட்களுக்கு அடிமையாகியுள்ள 02 பேரை புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

சந்தேக நபர்களிடமிருந்து 164 கிராம் 993 மில்லி கிராம் ஹெரோயின், 287 கிராம் 462 மில்லி கிராம் ஐஸ், 961 போதை மாத்திரைகள், 2,195 கஞ்சா செடிகள் மற்றும் 205,152 கிராம் 669 மில்லி கிராம் கஞ்சா ஆகிய போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (எ)

## போதைப்பொருள் விற்பனை பல்கலை. மாணவன் கைது!

கொழும்பு, செப். 15

போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட பல்கலைக்கழக மாணவன் ஒரு வர் கைது செய்யப்பட்டுள்ளதாக கிரிபத் கொடை பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர்.

கிரிபத்கொடை பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் களனி பல்கலைக்கழகத்துக்கு அருகில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

களனி பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் 26 வயது மாணவனே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து 30 போதை மாத்திரைகள் மற்றும் இலத்திரனியல் தராசு என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசார ணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# 12 வயது சிறுமி துஷ்பிரயோகம்; தந்தை, இரு சகோதரர்கள் கைது

கொழும்பு, செப். 15

12 வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் சிறுமியின் தந்தை மற்றும் இரண்டு சகோதரர்கள் கைது செய்யப்பட்டுள்ள தாக வெலிகம பொலிஸார் தெரிவித்த னர்.

47 வயதுடைய தந்தையும் 18 மற்றும் 15 வயதுடைய இரு சகோதரர்களுமே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சிறுமி கடந்த இரண்டு ஆண்டு களுக்கு முன்னர் முதன்முதலில் தனது தந்தையால் பாலியல் துஷ்பிரயோகத் துக்கு உட்படுத்தப்பட்டுள்ள நிலையில் மற்றுமொரு நாள் பெற்றோர்கள் வீட் டில் இல்லாத போது தனது இரு சகோ தரர்களால் பாலியல் துஷ்பிரயோகத் துக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இதன்போது, சந்தேக நபர்கள் குறித்த சம்பவத்தை எவரிடமும் கூறக்கூடாது என சிறுமியை அச்சுறுத்தியுள்ளதால் சிறுமி இது தொடர்பில் தனது தாயிடம் தெரிவிக்காமலிருந்துள்ளார்.

பின்னர், இந்த சிறுமியின் வீட்டிற்குச் சென்ற உறவினர் ஒருவர் சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்ய முயன்றுள்ளதால் சிறுமி இது தொடர் பில் தனது தாயிடம் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து, சிறுமியின் மூத்த சகோதரனுக்கு வெலிப்பிட்டிய பிர தேசத்தில் வேலை வாய்ப்பு ஒன்று கிடைத்துள்ளதால் பிரதேச செயலகத் தின் அதிகாரி ஒருவர் சிறுமியின் வீட்டுக்குச் சென்று விசாரித்துள்ளார்.

இதன்போது, இந்த சிறுமி தனக்கு நடந்த பாலியல் துஷ்பிரயோகங்கள் தொடர்பில் அந்த அதிகாரியிடம் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து, அந்த அதிகாரி இது வெலிகம பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார்.

விசாரணைகளை ஆரம்பித்த பொலிஸார் சந்தேக நபரான தந்தை மற்றும் இரு சகோதரர்களைக் கைது செய்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசார ணைகளை வெலிகம பொலிஸ் நிலை யத்தின் சிறுவர் மற்றும் பெண்கள் பாது காப்புப் பிரிவினர் மேற்கொண்டு வரு கின்றனர். (எ)

### வானில் கடத்திச்சென்ற

# பீடி இலை பொதிகளுடன் 27 வயது இளைஞன் கைது


புத்தளம், செப். 15

புத்தளம் பிரதேசத்தில் வானில் கடத்திச் செல்லப்பட்ட பீடி இலை பொதிகளுடன் இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

கடற்படையினர் மற்றும் நுரைச் சோலை பொலிஸாரால் மேற் கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது, வத்தளை பிரதேசத்தைச் சேர்ந்த 27 வயதுடைய இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து 371 கிலோ கிராம் நிறையுடைய 11 பீடி இலை பொதிகள் மற்றும் வான் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனையடுத்து, கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக் காக நுரைச்சோலை பொலிஸ் நிலை யத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (எ)



# வீட்டைச் சிதைதத்து...

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரேமதாசவின் தந்தையான முன் னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதா சவை விடுதலைப் புலிகளே கொலை செய்த தாகவும் கூறப்படுவதுண்டு. அப்படி யானால் அதன் காரணமென்ன? தமிழர் தாயக பூமியில் ஆயிரத்துக்கும் அதிக மான பௌத்த விகாரைகளை கட்டப்போவதாக அறிவித்த சஜித் பிரேமதாசவை தமிழர்கள் எவ்வாறு ஆதரிக்கப் போகின்றனர்? தேசிய மக்கள் சக்தி என்ற பெயரில் போட்டியிடும் அநுர குமார திசநாயக்கவின் ஜே.வி.பி. முன்னைய மகிந்த ஆட்சிக் காலத்தில் அவர்களுடன் சேர்ந்து வடக்கு கிழக்கு இணைந்த மாகாண சபை நிர்வாகத்தை நீதிமன்றம் ஊடாக இல்லாமற் செய்தது.

கடந்த வருடம் வடக்கில் ஜே.வி. பி.யினர் நடத்திய மே தின ஊர்வலத்தில் கலந்து கொண்ட ஒரேயொரு தமிழ் எம். பி. சுமந்திரன். நல்லாட்சிக் காலத்தில் ரணிலின் சட்ட மாஅதிபரென புகழப் பெற்றவர் சுமந்திரன். இப்போது ஏதோ ஒன்றுக்காக தமிழரின் வாக்குகளை புரட்டிக் கொடுத்து சஜித்தை ஜனாதி பதியாக்க துடித்துக் கொண்டிருப்பவரும் இவரே.

சில மாதங்களுக்கு முன்னர் ஊடகச் செவ்வி ஒன்றில், "தேவைப்படின் அமைச் சர் பதவியையும் ஏற்கத் தயார்" என்று கூறிய சுமந்திரன் அதற்கான காலம் இதுதான் என்று எண்ணுகிறார் போலும் என கொழும்பின் ஊடகவிய லாளர் ஒருவர் தெரிவித்தது உண்மை யாக இருக்கும்போல் தெரிகிறது.

தமிழரின் தேசிய அடையாளமாக போட்டியிடும் பொதுவேட்பாளர் அரியநேத்திரனை தோல்வியடையச் செய்வதற்காக மேற்கொள்ளும் முயற்சிகளும், விடப்படும் சவால்களுமே அவருக்கான வாக்குகளை சேகரிக்கும் படிக்கற்கள். அரியநேத்திரனை பதம் பார்க்க முனையும் சுமந்திரனுக்கு தேசி யத்தை நேசிக்கும் தமிழர்கள் தீர்ப்பு ளிக்கும் நாள் செப்டம்பர் 21.

ஒரேயொரு வாக்கு தமிழரின் பலத்தை நிரூபிக்கும். இரண்டாம் மூன்றாம் வாக்குகளை எவருக்கும் வழங்காது ஒரேயொரு வாக்கை மட்டும் அரியநேத்திரனுக்கு வழங்குவது காலத்தின் கட்டாயமாகும்.

# தேசிய மக்கள் சக்தியின்...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்னதான் தேசிய மக்கள் சக்தியின் தலைவர்கள் சகல சமூகங்களையும் சமத்துவமான வாய்ப்புக்களைக் கொடுக்கப்போவதாக பேசினாலும், சிறுபான்மைச் சமூகங்களின் நியாயபூர்வ மான அரசியல் அபிலாசைகளையும் மனக்குறைகளையும் ஏற்றுக்கொள் மறுத்துநிற்கும் தென்னிலங்கை தேசியவாத சக்திகளை பகைத்துக்கொள் ளாமல் இருக்கும் அணுகுமுறைகளை கடைப்பிடிப்பதில் மிகுந்த அக்கறை யுடன் செயற்படுகிறார்கள். அநுரா குமார போன்றவர்களை இனவாதிகள் என்று வர்ணிப்பதை விடவும் இனவா தத்தின் கைதிகள் என்று கூறுவதே பொருத்தமானதாகும்.

இது இவ்வாறிருக்க, அறகலய மக்கள் கிளர்ச்சிக்கு பின்னரான காலப்பகுதியில் தேசிய மக்கள் சக்திக்கு மக்கள் மத்தியில் அதிகரித்து வந்திருக்கும் ஆதரவை 1953 ஹர்த்தாலுக்கு பிறகு எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்க தலைமை யிலான ஸ்ரீலங்கா சுதந்திர கட்சிக்கு வளர்ந்த ஆதரவுடன் சில அவதானிகள் ஒப்பிடுகிறார்கள்.

மானியங்களில் குறைப்புச் செய்த ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்தின் நடவடிக்கைக்கு எதிராக முக்கியமாக லங்கா சமசமாஜ கட்சியும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியும் அவற்றின் தொழிற்சங்கங்களும் முன்னெடுத்த ஹர்த்தால் போராட்டத்துக்கு நாடு பூராவும் மக்களின் ஆதரவு கிடைத்தது. அமைச்சரவைக் கூட்டத்தைக் கூட கொழும்பு துறைமுகத்தில் தரித்து நின்ற பிரிட்டிஷ் கப்பலில் நடத்தவேண்டிய அளவுக்கு நாட்டில் கொந்தளிப்பான நிலைவரம்.

அந்த போராட்ட இயக்கத்தை தொடர்ந்து ஐக்கிய தேசிய கட்சி பல வீனமடைந்தது. உடனடியாக இல்லாவிட்டாலும், இரு மாதங்களுக்கு பிறகு பிரதமர் டட்லி சேனநாயக்க பதவியைத் துறந்து தற்காலிகமாக அரசியலில் இருந்தும் ஒதுங்கியிருந்தார்.

அரசாங்கத்தின் மீது மக்களுக்கு இருந்த வெறுப்புணர்வை ஹர்த்தாலை முன்னின்று நடத்திய இடதுசாரி கட்சிகள் அல்ல பண்டாரநாயக்கவே தனக்கு அனுகூலமாக பயன்படுத்தி மூன்று வருடங்களுக்கு பிறகு ஆட்சிக்கு வந்தார். அதே போன்றே இன்று அறகலய கிளர்ச்சிக்கு பின்னர் இலங்கையின் அரசியல் நிலைவரத்தில் மாற்றத்தின் விளைவாக பயனடைந்த தேசிய மக்கள் சக்தி பாரம்பரிய அரசியல் அதிகார வர்க்கத்தின் கட்டமைப்பின் இருப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் நிலை தோன்றியிருக்கிறது.

பண்டாரநாயக்க செய்து காட்டியதை அநுரா குமாரவும் செய்வாரா என்பதை அறிய நீண்ட காலம் அல்ல ஒரு வாரம் மாத்திரமே பொறுத்திருக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலமைப்பரிசில்...

நாடு முழுவதும் 2 ஆயிரத்து 849 பரீட்சை நிலையங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. இன்று காலை 9 மணிக்கு முன்னர் பரீட்சை நிலையத்திற்கு சமுகமளிக்கவேண்டுமென அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. (அ)

## தியாகி திலீபன்...

இந்நிலையில், யாழ்ப்பாண பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்த தடைவிதிக்க கோரி யாழ் , நீதவான் நீதிமன்றில் பொலிஸார் கடந்த வெள்ளிக்கிழமை மனு தாக்கல் செய்துள்ளனர்.

குறித்த மனு மீதான விசாரணைகளை எதிர்வரும் 18ஆம் திகதி முன்னெடுப்பதாகவும் அன்றைய தினம் மனுவில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள செல்வராசா கஜேந்திரன் மற்றும் விஸ்வலிங்கம் மணிவண்ணன் ஆகியோரை மன்றில் முன்னிலையாகுமாறும் மன்று கட்டளையிட்டுள்ளது. (அ)

## கஜேந்திரன்...

அழைப்பாணை விடுத்துள்ளது.

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பகுதியில் கடந்த திங்கட்கிழமை ஜனாதிபதித் தேர்தலை புறக்கணிக்கக் கோரி தமிழ் தேசிய மக்கள் முன்னணியினரால் பிரசார நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது சம்பவ இடத்துக்கு சென்ற மருதங்கேணி பொலிஸார் துண்டுப்பிரசுரங்களை பறிமுதல் செய்தனர். இதனையடுத்து தேர்தல் சட்டதிட்டங்களை மீறிய குற்றச்சாட்டின் பேரில் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன், சற்குணதேவி ஜெகதீஸ்வரன், செல்வராசா உதயசிவம் ஆகிய மூவர் மீதும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. இதன்பிரகாரம் எதிர்வரும் 18 ஆம் திகதி நீதிமன்றம் வருமாறு குறித்த மூவருக்கும் அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. (அ)

## சங்குக்கு...

வேட்பாளர் பா.அரியநேத்திரனுக்கு ஆதரவாக நெல்லியடி வாணிபர் கழகத்தின் ஆதரவுடன் நெல்லியடி மத்திய சந்தைக்கு அருகாமையில் நேற்று சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு இரா. மயூதரன் தலைமையில் இடம்பெற்ற "நமக்காக நாம்" பரப்புரை கூட்டத்தின் போது இவ் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நெல்லியடி நகர் பகுதி வர்த்தகர்கள், அயல் பகுதி மக்களிடையே தமிழ்ப் பொதுவேட்பாளருக்கு ஆதரவாக சங்கு சின்னத்துக்கு வாக்களிக்கவேண்டிய அவசியம் குறித்து இடம்பெற்ற பரப்புரை கூட்டத்தில் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும் பாராளுமன்ற உறுப்பினருமான க.வி.விக்னேஸ்வரன், தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்பை சேர்ந்த செல்வின் இரேனியஸ், புலம்பெயர் செயற்பாட்டாளர் பீற்றர், நெல்லியடி வாணபர் கழக நிர்வாகிகள் என பலரும் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது நெல்லியடி வாணிபர் கழகம் சார்பில் விடுக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது-

தமிழர்களுக்காக இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பா.அரியநேத்திரனுக்கு ஆதரவாக சங்கு சின்னத்துக்கு வாக்களிப்பது தமிழர்களாகிய எமது கட்டாய கடமையாகும். சிதறுண்டு போயுள்ள நாம் ஓரணியல் ஒன்று சேர்ந்து எமது ஒற்றுமையை உலகிற்கு காட்டுவதற்கு இந்த சந்தர்ப்பத்தினை நாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இந்த அடிப்படையில் தமிழப் பொது வேட்பாளராக போட்டியிடும் பா.அரியநேத்திரனுக்கு நெல்லியடி வாணிபர் கழகமாக எமது பூரண ஆதரவை வழங்குவதற்கு நாம் தீர்மானித்துள்ளோம் - என்றுள்ளது. (அ-2)

## புலிகளின்...

மட்டக்களப்பு மாவட்ட நிறைவேற் றுக்குழு உறுப்பினர் தர்மலிங்கம் கிருபாகரனின் ஒருங்கிணைப்பில் கூட்டம் இடம்பெற்றது. போராட்ட முன்னணியின் தேசிய நிறைவேற்றுக்குழு உறுப்பினர் வசந்த முதலிகே பிரதான உறுப்பினராகக் கலந்து கொண்டதோடு, முன்னணியின் திருகோணமலை மாவட்ட நிறைவேற்றுக்குழு உறுப்பினர் ராஜ்குமார் ரஜீவ்காந் உட்பட பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர். (அ)

## தமிழ்மக்களின்...

எனவும் அது சுட்டிக்காட்டியுள்ளது.

குறித்த ஒன்றியத்தின் சார்பாக அருட்பணி சி.ஜி.ஜெயக்குமார் விடுத்துள்ள அறிக்கையில்-

ஈழத்தமிழ் மக்களுடைய கூட்டு அரசியல் வேணவாவையும் தமிழின அழிப்பையும் ஏற்றுக்கொள்ள மறுக்கின்ற அரசியல் கோட்பாட்டுச் சூழலில் தெற்கில் இருக்கும் ஜனாதிபதி வேட்பாளர்கள் ஒன்றுபட்டு இருக்கிறார்கள். இவ்வாறான அரசியல் சூழமைவில் அரசியல் அறம் தெரிவாக தமிழ்ப் பொது வேட்பாளர் ஈழத்தமிழ் மக்களின் ஒற்றுமையின் அடையாளமாக நமக்கு முன் நிறுத்தப்பட்டுள்ளார். இம் முக்கியமான காலகட்டத்தில் தமிழ் மக்களின் தெரிவு, ஈழத்தமிழரின் அரசியல் வேணவாவை வலுப்படுத்தும் என்பது எமது ஆழமான நம்பிக்கை- என குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## அரசியல்..

கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வடக்கின் பிரச்னையை அரசியல் பிரச்னையாக மாத்திரம் பார்க்க முடியாது. வடக்கில் உள்ள பிரதான பிரச்னைகளுக்கும் தீர்வு காணப்படவேண்டும். வடக்கின் பிரச்னைகளை அரசியல் பிரச்னைகளுடன் மாத்திரம் மட்டுப்படுத்திவிட முடியாது.

வடக்கிற்கு அபிவிருத்தியும் அவசியம். காரணம் அவ்வாறு செய்யாவிட்டால் ஏனைய மாகாணங்கள் முன்னோக்கி பயணிக்கும்போது யாழ்ப்பாணம் வீழ்ச்சி காணும். மாகாண சபைகளை பலப்படுத்தி அதிகாரப் பகிர்வை வழங்கும் விடயம் தொடர்பில் என்னுடைய தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்வாங்கியுள்ளேன். மத்திய அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்க 9 சிற்றரசுகள் அவசியம்.

மாகாணங்களின் அபிவிருத்தியை அந்தந்த மாகாணங்களின் சிற்றரசுகள் பொறுப்பேற்க வேண்டும்.

தேசிய காணி ஆணைக்குழு அமைக்கப்பட வேண்டும். உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்கு நியமிக்கப்படவுள்ளது.

நவாஸ் தலைமையிலான ஆணைக்குழு அறிக்கையின் பிரகாரம் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான பிரச்னையை 5 வருடத்திற்குள் முடிவுக்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கவுள்ளோம். காங்கேசன்துறையில் முதலீட்டு வலயத்தை உருவாக்க எதிர்பார்த்துள்ளோம். பரந்தன், மாங்குளம் ஆகிய பிரதேசங்களிலும் முதலீட்டு வலயங்கள் அமைக்கப்படும். சுற்றுலாப்பயணிகள் கடல் வழி சுற்றுப்பயணங்களை மேற்கொள்ள தேவையாக கடல்வழி படகோட்டுனர் தொழில் வாய்ப்புக்களை வழங்கும் விடயத்தில் முன்னாள் போராளிகளையும் இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். டிஜிற்றல் வலயத்தையும் உருவாக்கவேண்டும். சிமார்ட் விவசாயத்தை ஏற்படுத்தி முன்னாள் போராளிகளுக்கு சிறந்த எதிர்காலத்தை உருவாக்கிக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். கடற்றொழிலாளர்களும் பாதுகாக்கப்படவேண்டும். சூரிய மின்சக்தி வலயமாக பூனகரி பிரதேசத்தை மாற்ற வேண்டும். செப்ரெம்பர் 21 ஆம் திகதி காஸ் சிலிண்டருக்கு முன்பாக புள்ளி[illegible] கொள்கின்றோம் - என்றார். (அ)

# இலஞ்சம், ஊழல் தொடர்பில் 2,142 முறைப்பாடுகள் பதிவு

கொழும்பு, செப். 15

இந்த வருடத்தின் முதல் ஆறு மாதங்களில் இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பில் 2,142 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன்படி, இலஞ்ச குற்றச்சாட்டு தொடர்பில் 158 முறைப்பாடுகளும் ஊழல் குற்றச்சாட்டு தொடர்பில் 379 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளன.

அத்துடன், சட்டவிரோதமாக சொத்துக்களை சேர்த்தமை தொடர்பில் 79 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இவ்வருடத்தின் முதல் 6 மாதங்களில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பில் 26 பேர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் அவர்களில் 8 பேர் பொலிஸ் அதிகாரிகள் ஆவர்.

மேலும், இலஞ்சம் வாங்கியமை தொடர்பில் 25 பேர் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளதாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது. (எ)

## தீர்வு...

வெற்றியை உறுதி செய்யும் வகையில் பிரசார கூட்டம் யாழ்ப்பாணம் நாவாந்துறையில் நேற்று நடைபெற்றது.

நாவாந்துறை சென் மேரிஸ் விளையாட்டு மைதானத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையில், ஆயிரக்கணக்கான மக்களின் எழுச்சியுடன் பிரசாரக் கூட்டம் நடைபெற்றது. (அ)

## சுமந்திரன், கஜேந்திரன்...

சின்னத்திற்கு 21ஆம் திகதியன்று காலை வாக்களிக்க வேண்டும். ஒவ்வொரு தமிழ் மகனும் தமிழ் மகளும் உங்களுக்கு வாக்குரித்து இருந்தால் நீங்கள் கட்டாயமாக இந்த முறை ஜனாதிபதித் தேர்தலில் சங்கு சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டும். இந்தத் தேர்தலுக்கும் மற்றைய தேர்தல்களுக்கும் என்ன வித்தியாசம் என்று கேட்பீர்கள். வித்தியாசங்கள் இருக்கின்றன.

முதலாவதாக நாங்கள் முதன் முறையாகத் "தமிழ்ப்பேசும் மக்கள் நாம்" என்ற அடிப்படையில் இந்தத் தேர்தலில் கலந்து கொள்கின்றோம். இதுவரை "இலங்கையர் நாம்" என்று கலந்து கொண்டோம். அது எமக்கு எந்த நன்மைகளையுந் தரவில்லை. நாம் இதுவரை வாக்களித்த நபர்கள் நாம் வாக்களித்தோம் என்ற நன்றியறிதல் கூட இல்லாது பதவிக்கு வந்ததும் சிங்கள பௌத்த சிந்தனையில் மூழ்கிவிட்டார்கள். அரசியல் யாப்பில் இருப்பவற்றைக் கூடத் தர மறுத்தார்கள். வட கிழக்கு தமிழ்ப்பேசும் மக்கள் வடகிழக்கில் பெரும்பான்மையினர் என்பதை மறந்து எம்மை வெறும் சிறுபான்மையினராகக் கருதி சிங்கள பௌத்த இனவாட்சியின் கனலை எம்மீது படர விட்டார்கள். அதனால்த்தான் நாம் இம்முறை "நாம் யார்" என்ற கேள்விக்கு விடை அளிக்கும் விதத்தில் "நாம் தமிழர் - நமக்கு நாம்" என்ற சங்குக் குரலை எழுப்பியுள்ளோம்! "சங்கே முழங்கு" என்று சகல தமிழரையும் சங்குக்கு வாக்களிக்குமாறு கோருகின்றோம்.

இரண்டாவதாக நாம் கட்சி சார்ந்து இந்தத் தேர்தலில் நிற்கவில்லை. கட்சிகள் கடந்து தேர்தலில் நிற்கின்றோம். தமிழ்ப் பேசும் மக்களாக நாம் இந்தத் தேர்தலை எதிர்கொள்கின்றோம். கட்சிகள் வேற்றுமையை வலுப்படுத்துவன. சுயநலத்தை உறுதிப்படுத்துவன. ஆனால் இந்தத் தேர்தல் கட்சிகள் கடந்து தமிழ்ச் சமூகமாகச் சிந்தித்து ஒற்றுமையை மையமாக வைத்து நாம் நடத்தும் தேர்தல். ஆம்! நாம் தான் இந்தத் தேர்தலை நடத்துகின்றோம். அரசாங்கம் இந்த நாட்டின் ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்க ஜனாதிபதித் தேர்தலை நியமித்தது. நாம் அதனை மாற்றி தமிழ் மக்களை ஒற்றுமைப்படுத்தும் ஒரு தேர்தலாக இதனை மாற்றியுள்ளோம். தமிழ் மக்களின் அல்லல்களை அறிவிக்கும் ஒரு தேர்தலாக மாற்றியுள்ளோம்.

மூன்றாவதாக எமது ஒற்றுமையை உறுதிப்படுத்த இந்தத் தேர்தலைத் தேர்ந்தெடுத்ததற்கு ஒரு காரணம் உண்டு. பாராளுமன்றத் தேர்தலானது தேர்தல் தொகுதிகளில் நடைபெறும். அங்கு உள்ளூர் மக்களே வாக்களிப் பார்கள் தேர்ந்தெடுக்கவும் படுவார்கள். மாகாணசபைத் தேர்தலும் அவ்வாறே [illegible] மக்களே தேர்தலில் நின்று [illegible] உள்ளூர் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பார்கள். உள்ளூராட்சி தேர்தல்களும் அவ்வாறே தான் நடைபெறுவன. ஆனால் ஜனாதிபதித் தேர்தல் மட்டுமே முழு நாட்டையும் மையப்படுத்தி நடைபெறுந் தேர்தல். இந்தத் தேர்தலில்த்தான் "குற்றாலத்தில் இடி இடித்தால் கோயம்புத்தூர் விளக்கணையும்!" இங்கு நாம் தேர்தலில் வாக்களிக்கும் விதம் தெற்கு மக்களை கடுப்புக்குள் தள்ளிவிடும். இவ்வாறு நாம் செய்வது இதுவரை காலமும் தெற்கு எம்மை ஏமாற்றி வந்ததற்குப் பதிலடியாகும். எம்மைக் கிள்ளுக்கீரையாக இதுவரை பாவித்த தென்னவரை சிந்திக்க வைக்கும் தேர்தலாக இம்முறை மாற்றியுள்ளோம்.

நாடு நலம் பெற வேண்டுமென்றால் எம்மையும் சேர்த்துப் பயணிக்க வேண்டும் என்ற செய்தியை நாங்கள் இம்முறை வலுவாக வெளிப்படுத்தியுள்ளோம். கோட்டாபய சிங்களவரிடம் இருந்து மட்டும் வாக்குகள் பெற்று ஜனாதிபதியாக முடியும் என்று காட்டினார். உயிர்த்த ஞாயிறு அவரின் சிந்தனைக்கு உரம் ஊட்டியது. இம்முறை "நாமில்லாமல் நீங்களா?" என்ற கேள்வியை தென்னவர் முன் நாம் வைத்துள்ளோம்.

நான்காவதாக இந்தத் தேர்தலில் சுயநலம் களைந்து நாம் யாவரும் ஈடுபட்டுள்ளோம். எமது வேட்பாளர் தேர்தலில் தோற்பார். அது எமக்குத் தெரியும். அவருக்குந் தெரியும். அப்படியிருந்தும் தனது கட்சியுடன் பகைத்துக் கொண்டு அரியநேத்திரன் எமது கட்டமைப்பின் அழைப்பை ஏற்று தேர்தலில் நிற்கின்றார். தேர்தலில் தோற்பது மட்டுமல்ல வருங்காலத் தேர்தல்களில் அவர் ஈடுபட முடியாத சூழலில் கூட தனது சுயநலம் களைந்து தமிழ் மக்களின் அடையாளமாக அவர் பவனி வருகின்றார். நாம் கூட பொது நலம் கருதியே அவருக்காகப் பாடுபடுகின்றோம்.

ஐந்தாவதாக இவ்வாறு நாம் சேர்ந்து பயணிக்கும் போது எம்முள் இருக்கும் காட்டிக் கொடுக்கும் பகையாளிகளை நாம் அடையாளப்படுத்துகின்றோம். எட்டப்பர்களை அடையாளப்படுத்துகின்றோம். அவர்களைத் தவிர்த்து நாம் எம் பவனியைத் தொடர்ந்து கொண்டிருக்கின்றோம். தமிழ் பொது வேட்பாளருக்கு வாக்களிக்கப்படாது என்று மேடையேறி முழங்குவேன் என்றவர் இன்னமும் அந்தக் கூட்டத்தைக் கூட்டவில்லை. அடுத்த பாரளுமன்றத் தேர்தலில் தெற்கத்திய கட்சி ஒன்றில் இருந்து அவர் நியமனம் பெறுவதே அவருக்குச் சாலச் சிறந்தது.

இன்னுமொருவர் தேர்தலைப் பகிஷ்கரிப்போம் என்றார். தமிழ் வேட்பாளருக்கு வாக்கிடுவதையும் பகிஷ்கரிப்போம் என்றார். அவரும் அடுத்த பாராளுமன்றத் தேர்தல் பற்றி இப்பொழுதிருந்தே சிந்திக்க வேண்டும்- என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

# நாலாயிரத்தை அண்மிக்கும் தேர்தல் முறைப்பாடுகள்!

## தேர்தல்கள் ஆணைக்குழு தகவல்



கொழும்பு, செப். 15

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இதுவரை 3, 828 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இவற்றில் 28 முறைப்பாடுகள் வன்முறைச் செயல்கள் தொடர்பிலும், மேலும் 3,720 முறைப்பாடுகள் தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பிலும் பதிவாகி யுள்ளன.

இதேவேளை, இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளில் சிறிதளவு அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் ஏ. எல். ரத்நாயக்க தெரிவித்தார்.

அத்துடன், ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் பொலிஸாருக்கு 350 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்தார். (எ)

# பரீட்சையின் பின் மாணவர்களை சுதந்திரமாக நடமாட விடுங்கள்

## விசேட வைத்திய நிபுணர் ரூமி ரூபன்

கொழும்பு, செப். 15

இன்றைய தினம் 15 ஆம் திகதி நடைபெறவுள்ள தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை முடிவடைந்ததும் மாணவர்களை சுதந்திரமாக நடமாட விடுமாறு விசேட வைத்திய நிபுணர் ரூமி ரூபன், பெற்றோர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

புலமைப்பரிசில் பரீட்சைக்கு முன்னரும் பின்னரும் தங்களது பிள்ளைகளை ஏனைய பிள்ளைகளுடன் ஒப்பிடுவதை தவிர்க்குமாறும் அவர் பெற்றோர்களிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

கடந்த சில மாதங்களாக புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தயாரான மாணவர்கள் அதிக மன அழுத்தத்தில் இருந்ததாகவும், இனியாவது மாணவர்கள் மீது அழுத்தம் கொடுக்க வேண்டாம் எனவும் அவர் அறிவுறுத்தினார்.

பரீட்சை எழுதிய பின், பரீட்சை வினாத்தாளை மீண்டும் மாணவர்களிடம் கொடுத்து, அவர்களை எழுத வைத்து, விடைகள் சரியாக உள்ளதா? என சோதித்து பார்ப்பதில் பலனில்லை.

புலமைப்பரிசில் பரீட்சை என்பது மாணவர்களின் வாழ்வில் சந்திக்கும் இடையூறுகளில் ஒன்று எனவும், வாழ்க்கையில் இது போன்ற அனுபவங்கள் இன்னும் அதிகமாக இருக்கும் எனவும் மாணவர்களின் பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளுக்கு கூறி அவர்களைப் பலப்படுத்த வேண்டும் எனவும் அவர் கூறினார்.

மேலும் , புலமைப்பரிசில் பரீட்சை காலத்தில் மாணவர்கள் இழந்த தங்களது குழந்தைப் பருவத்தை மீண்டும் அவர்களுக்கு வழங்குங்கள் என்றும் விசேட வைத்திய நிபுணர், பெற்றோர்களிடம் கேட்டுக்கொண்டுள்ளார்

# எதிர்காலத்துக்கான வாய்ப்புகளை இளைஞர்களே இழக்க வேண்டாம்!

## ஜனாதிபதி ரணில் கோரிக்கை



புத்தளம், செப். 15

**திசைகாட்டிக்கும் அநுரகுமாரவுக்கும் வாய்ப்பளிக்கச் சென்று இலங்கையின் இளைஞர் சமூகம் தமது எதிர்காலத்துக்கான வாய்ப்புகளை இழக்க வேண்டாம் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.**

மீண்டும் வரிசை யுகத்தை உருவாக்கும் அநுரகுமாரவின் பொருளாதாரக் கொள்கைகள் குறித்து தான் கேள்வி எழுப்பியதாகவும் அதற்கு 03 நாட்கள் கடந்தும் இதுவரை பதில் வழங்கப்படவில்லை என்றும் குறிப்பிட்ட ஜனாதிபதி, பொருளாதாரக் கொள்கை இல்லாத திசைகாட்டியிடம் தங்கள் எதிர்காலத்தை ஒப்படைக்க வேண்டுமா என்பதை இளைஞர்கள் முடிவு செய்ய வேண்டும் என்றும் தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரத்தைப் பாதுகாத்து வரிசையில் நிற்கும் மற்றொரு யுகத்துக்கு இடமளிக்காமல், மக்களின் வாழ்க்கைச் சுமையைக் குறைப்பதே தனது தேவை எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, நாட்டு மக்களின் சுமையை அதிகரிக்கத் தயாராக இருக்கும் ஒரு குழுவினரிடம் நாட்டின் பொறுப்பை ஒப்படைக்கக் கூடாது என்றும் வலியுறுத்தினார்.

புத்தளத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் நடைபெற்ற "ரணிலால் இயலும்" பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த பொதுக் கூட்டத்தில் கட்சி, சாதி, மத வேறுபாடின்றி பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டனர்.

நாட்டின் அந்நியச் செலாவணி கையிருப்பு வலுப்பெற்றுள்ள நிலையில் வாகனங்கள் மற்றும் இயந்திர மற்ற வாகன உதிரிப் பாகங்களை இறக்குமதி செய்வதற்கு விதிக்கப்பட்டிருந்த தற்காலிக தடையை நீக்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

வரி செலுத்துவோருக்கு நிவாரணம் வழங்குவதற்கான அரசாங்கத்தின் திட்டத்தின் கீழ் 2025 ஏப்ரல் முதல் நடைமுறைக்கு வரும் வகையில் தனிநபர் வருமான வரி கட்டமைப்பை திருத்துவதற்கும் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது என்றும் ஜனாதிபதி சுட்டிக் காட்டினார்.

சுய முயற்சியில் எழுச்சி கண்ட இலங்கையைக் கட்டியெழுப்பவதே எனது எதிர்பார்ப்பாகும்.

அநுரவின் வரவு - செலவுத் திட்ட யோசனைகள் ரூபாயை வலுவிழக்கச் செய்யும். அதனால் 500 ரூபாய் வரையில் டொலர் அதிகரிக்கும் என்ற விடயங்களை அவரின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் யோசனைகளின் அடிப்படையில் சுட்டிக்காட்டினேன்.

அதில் அநேகமான யோசனைகள் சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தங்களுக்கு முரணாகவே காணப்பட்டது. நாம் நாணய நிதியத்துடன் செய்து கொண்டிருக்கும் ஒப்பந்தத்தின்படி அவர்கள் எமக்கு கடன் பெறுவதற்கு அனுமதி வழங்கவில்லை.

அதற்கு அமைவாகவே அரசாங்கம் வரவு - செலவு திட்டத்தை தயாரித்துள்ளது. ஆனால், திசைகாட்டியின் யோசனையில் பாரிய வரவு - செலவு திட்ட இடைவெளி காணப்படுகிறது. அதனை நிவர்த்திக்க அவர்கள் கடன் பெற வேண்டியிருக்கும். அவ்வாறு கடன் பெறும் பட்சத்தில் ஐ. எம். எவ். உடன்படிக்கை மீறப்படும். அதன் பலனாக ஐ. எம். எவ். உடன்படிக்கையிலிருந்து விலகினால் ரூபாயின் பெறுமதி சரிவைச் சந்திக்கும்.

எனவே, மக்கள் இந்த சுமையை தாங்கிக்கொண்டு அவதிப்பட வேண்டும் என்பதா அவர்களின் நோக்கம் என்பதே எனது கேள்வியாகும். மக்கள் மீது சுமைகளை சுமத்துவதால் திசைகாட்டிக்கு கவலை வரவில்லையா? மீண்டும் வரிசைகளை உருவாக்குவதா அவர்களின் நோக்கம். என்ற கேள்விகளே எனக்கு உள்ளது. நான் அவர்களை அவதூறு செய்யவில்லை. மாறாக அவர்களிடம் பொருளாதாரத்தை வழிநடத்தும் இயலுமை உள்ளதா என்ற கேள்வியை மட்டுமே கேட்டேன்.

ரூபாயை பலப்படுத்த வேண்டும் என்ற நிபந்தனையையே ஐ. எம். எவ். முதலில் விதித்தது. அதன்படி செயல்பட்டதாலேயே இன்று ரூபாயின் பெறுமதி அதிகரித்திருக்கிறது. அதனால் ஹாஸ், எண்ணெய், உணவு போன்றவற்றின் விலைகள் குறைந்துள்ளன. சமூர்த்தி போன்று மூன்று மடங்கு நிவாரணம் வழங்க முடிகிறது- என்றார். (எ)




# வடக்கு - கிழக்கு எம். பிக்களுடன் இடைக்கால அமைச்சரவை வரும்

கொழும்பு, செப். 15

தேசிய மக்கள் சக்தியின் இடைக்கால அமைச்சரவையில் வடக்கு - கிழக்கு, மலையகத்தை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் இடம்பெற்றிருப்பார்கள் என்று கட்சியின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தி, ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்ற பின்னர் இலங்கையின் பரந்துபட்ட அரசியல் அடையாளத்தை பிரதிபலிக்கும் விதத்தில் இடைக்கால அமைச்சரவையை ஏற்படுத்தும் எனவும் அவர் கூறினார்.

நாங்கள் இலங்கை அரசாங்கத்தை ஏற்படுத்த விரும்புகின்றோம். சிங்கள அரசாங்கத்தையில்லை எனத் தெரிவித்துள்ள அவர் அரசாங்கம் சாராத பாராளுமன்ற உறுப்பினர்கள் இடம்பெற்றிருக்கும் முதலாவது அமைச்சரவையாக இது காணப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

222 பாராளுமன்ற உறுப்பினர்களில் வடக்கு - கிழக்கு மலையகத்தை சேர்ந்த சிறந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். அவர்கள் இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதற்காக தெரிவு செய்யப்படுவார்கள் என்றும் கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 15.09.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org